
Annual Subscription Rs. 90/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 25 இதழ் - 11 நவம்பர் 2012

தனிப் பிரதி ரூ. 9/-




Bro. Balarama



பெண்கள் சிறப்பு வகுப்பில்
சகோ. பெட்டி சோட் ( Betty Choate ) மற்றும்
சகோ. ரேச்சல் நாயகம் அவர்கள்

கருத்தரங்கில் கலந்து கொண்டோருக்கு நன்றி



கருத்தரங்கில் கலந்து கொண்டு சிறப்பித்தவர்கள்



# THIRUMARAI AASAAN

S. Rajanayagam

Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 25 NOVEMBER 2012 Issue - 11


## தயவாய் கவனியுங்கள்

- ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தை கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
- M.O. செய்பவர்கள் தகவலுக்கான பகுதியில் உங்கள் தெளிவான விலாசம் & தொலைபேசி எண்ணை கண்டிப்பாக எழுதவும்.
- அஞ்சல் வழியில் வேதாகம படிப்பவர்கள் உங்களது தொலை / அலை பேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தைத் தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்

## ஆசானின் போதனையில் ....


1. ஆசிரியர் உரை ........................... 1
2. ஏன் நாங்கள் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறோம்? ........................... 11
3. பெண்கள் பகுதி ........................... 15
4. வாலிபர் பகுதி ........................... 18
5. சிறுவர் பகுதி ........................... 21
6. நிழலும், நிஜமும் ........................... 23
7. வசன ரீதியான கிறிஸ்துவின் சபை ........................... 28

ஆசிரியர் உரை

# இது ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல

**ஆ**தியிலே தேவன் வானத்தையும், பூமியையும் உண்டாக்கின நாள் முதற்கொண்டு நாம் வாழும் இப்பூமி பற்பல நிகழ்வுகளை அவ்வப்போது கண்டு வந்துள்ளது. அந்நிகழ்வுகள் சரித்திர ரீதியாக நடந்திருக்கலாம், பூகோள ரீதியாக ஏற்பட்டிருக்கலாம், அரசியல் ரீதியாக முடிந்திருக்கலாம். இன்னும் அவை ஆன்மீக ரீதியாகக் கூட உண்டாயிருக்கலாம். ஆனால், அப்படி நடந்த எல்லா நிகழ்வுகளுக்கும் ஜனங்களும், சரித்திரமும் சமமான முக்கியத்துவம் கொடுத்துவிடுவதில்லை. ஏன் கொடுக்கவில்லை என்பதற்கான காரணத்தை நாம் பூத கண்ணாடி வைத்துத் தேடிக் கொண்டிருக்க வேண்டிய அவசியமுமில்லை. ஏனெனில், ஒரு நிகழ்வு முக்கியமானதா அல்லது முக்கியமற்றதா, ஜனங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டதா அல்லது நிராகரிக்கப்பட்டதா, சரித்திரத்தால் அங்கீகரிக்கப்பட்டதா அல்லது தள்ளப்பட்டதா என்பது பல அம்சங்களை உள்ளடக்கியதாக உள்ளது. ஆம், ஒரு நிகழ்வு எந்தக் காலகட்டத்தில் நடந்தது, அந்நிகழ்வில் சம்பந்தப்பட்டவர்கள் யார், அந்நிகழ்வால் உண்டான பாதிப்பு எப்படிப்பட்டது, அது ஏற்படுத்திய தாக்கம் எந்தளவு உள்ளது, அந்நிகழ்வால் விளைந்த நன்மை, தீமைகளின் அளவு என்ன என்பன போன்ற பல காரியங்கள் கணக்கிலெடுத்துக் கொள்ளப்பட்டு, அதன்பிறகே அதன் முக்கியத்துவம் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த அடிப்படையில் தான் ஒவ்வொரு நிகழ்வும் பார்க்கப்பட்டு அதற்கான முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. ஆனால், சில நேரங்களில் சில நிகழ்வுகள் வேண்டுமென்றே குறைத்து மதிப்பிடப்பட்டு, அதன் முக்கியத்துவம் கண்டும் காணாமலும் விடப்பட்டுள்ளது. இதற்கான மிகச் சிறந்த உதாரணம், முதல் நூற்றாண்டில் நம்முடைய இரட்சகராகிய இயேசு ஆண்டவர் சம்பந்தப் பட்ட காரியங்களே. அவர் வாழ்ந்த முதலாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும், அவர் உயிர்த்தெழுந்த பின்னான நாட்களிலும், அவர் பற்றிய காரியங்கள் அன்றைக்கிருந்த ஆட்சியாளர்களாலும், மதத் தலைவர்களாலும் திட்டமிட்டு அமுக்க முயற்சிக்கப்பட்டது. அதிலே அவர்கள் வெற்றி பெறமுடியவில்லை என்பது வேறு விஷயம். ஆனால், இதுதான் நடந்த உண்மை. இப்படி மறைக்க முயற்சிக்கப்பட்ட பகிரங்கமான உண்மை பற்றிதான் மாமனிதனா கிய அப்போஸ்தலன் பவுல், ஒரு சமயம் அகிரிப்பா ராஜாவினிடத்தில், மூடி மறைப்பதற்கு இது ஒன்றும் *"ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல"* என்று சத்தமாகக் கூறினார்.

**முதல் நூற்றாண்டில் நம்முடைய இரட்சகராகிய இயேசு ஆண்டவர் சம்பந்தப்பட்ட காரியங்களே. அவர் வாழ்ந்த முதலாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும், அவர் உயிர்த்தெழுந்த பின்னான நாட்களிலும், அவர் பற்றிய காரியங்கள் அன்றைக்கிருந்த ஆட்சியாளர்களாலும், மதத் தலைவர்களாலும் திட்டமிட்டு அமுக்க முயற்சிக்கப்பட்டது.**

சரி, பவுலடியார் இதை எந்தச் சூழ்நிலையில் சொன்னார் என்பதை தெரிந்துகொள்ள, நமது வழக்கத்தின்படியாக இதன் பின்னணியைக் கொஞ்சம் பார்த்து விடுவோம்.

மூன்று நற்செய்திப் பயணங்களை மேற்கொண்ட பவுல், தனது மூன்றாம் பயணத்தை முடித்துக் கொண்டு எருசலேமுக்கு வந்து சேர்ந்தார் (அப். 21:18). அங்கு அப்போஸ்தலர்களின் ஆலோசனையின் பேரில் சில யூதமார்க்க சம்பிரதாயங்களை முடித்த நிலையில் (21:26) ஆசியா நாட்டிலிருந்து வந்த யூதர்களால் பிரச்சினை ஏற்பட்டு காரியம் கை மீறிப்போனது (அப். 21:27-31). பிறகு சேனாதிபதியின் தலையீட்டின் பேரில் காப்பாற்றப்பட்டு, கோட்டைக்குள் எப்படியோ கொண்டு போகப்பட்டான் (32-34). அதன் பிறகு, அவன் ஆலோசனைச் சங்கத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு உத்தரவு சொல்லுகையில் கலகம் உண்டானதினால் மீண்டும் கோட்டைக்குள் கொண்டு போகும்படி சேனாதிபதி லீசியா கட்டளையிட்டான் (23:10) ஆனால், அவன் மீது குற்றம் சாட்டினவர்களோ, தாங்கள் பவுலைக் கொலை செய்யுமளவும், புசிப்பதுமில்லை, குடிப்பதுமில்லையென்று சபதம் பண்ணிக்கொண்டு சரியான சமயத்துக்குக் காத்திருந்தார்கள் (அப். 23:12,13). இக்கொலைச் சதிக்கு யூத மத உயர் அமைப்பான ஆலோசனைச் சங்கத்தாரும் உடந்தையாயிருந்திருக்கிறார்கள் (23:15) என்பது கேட்பதற்கே எப்படியோ உள்ளது!

ஆனால், இந்த சதியாலோசனை அரசல் புரசலாக பவுலின் சகோதரியின் மகனுக்குத் தெரியவந்தது. பிறகு பவுல் மூலமாக சேனாதிபதியாகிய லீசியாவின் காதுகளுக்குப் போய்ச் சேர்ந்த போது, அவன் சாதுரியமாகச் செயல்பட்டு தேசாதிபதி பேலிக்ஸிடம் மேற்கொண்டு விசாரிக்கப்படும்படி அனுப்பி வைத்தான். ஆனால், இந்த உல்லாசப் பிரியனாகிய பேலிக்ஸ், எது நியாயம், எது நீதி என்று தெரிந்து கொள்ள முயற்சிக்காமல், பணத்தாசை பிடித்தவனாக இருந்து, பணத்தைப் பெற்றுக்கொண்டு நீதியின் குரல் வளையை நெறிக்க ஆயத்தமாக இருந்தான். இங்கே வசனத்தைக் கவனியுங்கள். மேலும், அவன் பவுலை விடுதலை பண்ணும்படி தனக்கு *“அவன் பணம் கொடுப்பானென்று நம்பிக்கையுள்ளவனாயிருந்தான்; அதினிமித்தம் அவன் அநேகந்தரம் அவனை அழைத்து அவனுடனே பேசினான்”* (24:26). சத்தியவானாகிய பவுல், தன் நம்பிக்கைக்காக எப்படிப்பட்ட இழி பிறவிகளுக்கு முன்பாகவெல்லாம் போய் நிற்க வேண்டியிருந்துள்ளது பாருங்கள்!

இந்த பேலிக்ஸை அடுத்து, ஒரு தேசாதிபதி வந்தான், அவன் பெயர் பெஸ்து. இவனாகிலும் நல்லவனா என்று பார்த்தால் அங்கும் பவுலுக்கு ஏமாற்றமே. ஆம், இந்த ஆளுநர், பவுலின் மீது சாட்டப்படுகின்ற அநேகங் கொடிய குற்றச்சாட்டுகளின் பின்னணியையும், சாட்டுகிற மனிதர்களின் உள்நோக்கத்தையும் புரிந்து கொள்ளாமல், " *யூதர்களுக்கு தயவு பண்ண மனதாய், விசாரிக்கப்பட எருசலேமுக்கு வர உனக்கு சம்மதியா என்று கேட்டான்* ". (25:7-9) விசாரணை என்ற பெயரில் பின்னப்பட்டிருக்கும் சதி வலையைக் கனகச்சிதமாகப் புரிந்து கொண்ட பவுல் மிகுந்த ஞானமாக "*நான் இராயனுக்கு அபயமிடுகிறேன்* " என்றான். நொண்டிக் குதிரைக்கு சறுக்கினதே சாக்கு என்பது போல " *நீ இராயருக்கு அபயமிட்டாயே; இராயரிடத்திற்கே போகக்கடவாய்* " என்று உத்தரவு சொன்னான் இந்த பெஸ்து. தன் பொறுப்பை உணர்ந்து, கடமையாற்றத் தெரியாத கையாலாகாத மனிதனெல்லாம் அன்றைக்கு நாற்காலியில் அமர்ந்திருந்துள்ளனர். இவர்களுக்கு முன்பாகவும் பவுல் நிற்க வேண்டியதொரு நிலை. எவ்வளவு கடுமையான சூழ்நிலைகளையெல்லாம் பவுல் சத்தியத்தினிமித்தமும், ஊழியத்தினிமித்தமும் கடந்து வந்துள்ளார் பாருங்கள்.

பிறகு கொஞ்ச நாட்கள் கழித்து, அகிரிப்பா ராஜாவும் பெர்னீக் கேயாளும் விருந்தாளிகளாக பெஸ்துவைக் கண்டு கொள்ளும்படி வந்தனர். பவுலைப் பற்றி பெஸ்து மூலமாய் கேள்விப்பட்ட அகிரிப்பா, அந்த மனுஷன் சொல்லுகிறதை நானும் கேட்க மனதாயிருக்கிறேன் என்றான் (25:22) " *தர்ம அடி* " என்பது போல, பவுல் " *தர்ம விசாரணை* " செய்யப்படுகிறான்.

**தன் பொறுப்பை உணர்ந்து, கடமையாற்றத் தெரியாத கையாலாகாத மனிதனெல்லாம் அன்றைக்கு நாற்காலியில் அமர்ந்திருந்துள்ளனர். இவர்களுக்கு முன்பாகவும் பவுல் நிற்க வேண்டியதொரு நிலை.**

இருப்பினும் அகிரிப்பாவிற்கு முன்பாக விசாரணைக் கைதியாக நிற்பதில் பவுலுக்குக் கொஞ்சம் திருப்தி. ஏனெனில், " *யூதருடைய சகல முறைமை களையும், தர்க்கங்களையும் அவன் அறிந்திருந்தான்* " (26:3) அப்படி அறிந்தி ருந்தபடியால் இவனிடத்திலாகிலும் நியாயம் கிடைக்காதா என்ற நப்பாசை உள்ளூர பவுலுக்கும் இருந்திருக்கும். அப்படித்தானே! ஆகவே தான், விலாவாரியாக உத்தரவு கொடுக்கிறான். தன் சிறுவயது வாழ்க்கை, இயேசுவால் சந்திக்கப்பட்ட விதம், அந்த அழைப்புக்கு அடிபணிந்த அழகு, பிறகு கிறிஸ்துவுக்காக இவன் செய்த ஊழியம் என்று காரியங்களை வரிசையாய் அடுக்கி வாதத்தை திறமையாக எடுத்து வைத்தான். அத்தோடு, யூதர்களிடத்திலும், கூறுகிறார். ... "*அவர்கள் தேவனிடத்திற்கும் மனந் திரும்பிக் குணப்படவும். மனந்திரும்புதலுக்கேற்ற கிரியைகளைச் செய்யவும் வேண்டுமென்று அறிவித்தேன்* " என்றான் (26:20) எவ்வளவு பக்தி வைராக்கியத்தோடு பவுல் பேசியிருக்கிறாரென்று பாருங்கள்.

ஆனால், அகிரிப்பா ராஜாவோடு அமர்ந்து பவுலின் வாதத்தைக் கேட்டுக் கொண்டிருந்த கையாலாகாத மனிதனாகிய தேசாதிபதி பெஸ்துவுக்கோ " *அது பிதற்றலாகவும், பைத்தியமாகவும்* " தெரிந்திருக் கிறது. (26,24) ஆம், அவன் "*பவுலே நீ பிதற்றுகிறாய், அதிக கல்வி உனக்கு பைத்தியமுண்டாக்குகிறது என்றான்*". தன்னை ஒருவன் பைத்தியக்கார னென்று சொன்ன நிலையிலும், நிதானம் இழக்காத பவுல், இல்லை யில்லை, நான் சத்தியமும் சொஸ்த புத்தியுமுள்ள வார்த்தைகளைப் பேசுகி றேன் என்று பதிலளித்து விட்டு (26:25), இதற்கு மேல் இவனிடம் பேசிப் பயனில்லை என்பதைத் தெரிந்து கொண்டு, அகரிப்பா ராஜாவின் பக்க மாய்த் திரும்பி இந்தச் சங்கதிகளை ராஜா அறிந்திருக்கிறார். ஆகையால், தைரியமாக அவருக்கு முன்பாகப் பேசுகிறேன். இவைகளில் ஒன்றும் அவருக்கு மறைவானதல்லவென்று எண்ணுகிறேன்; "*இது ஒரு மூலையில் நடந்த காரியமல்ல* " என்றான் (26:26).

இது ஒரு மூலையிலே நடந்த காரியமல்லவென்று பவுல் சொன்ன போது, எவைகளை மனதில் கொண்டவராகப் பேசியிருப்பார்? தான் பொய் யாகக் குற்றம் சாட்டப்பட்டு, ஆலோசனை சங்கத்துக்கு முன்பாகக் கொண்டு போகப்பட்டது பற்றியும், விசாரணை என்ற பெயரில் வித்தியாச மான மனிதர்கள் முன்பாக நிறுத்தப்பட்டதையுமா பேசியிருப்பார்? ஒருவேளை இவைகளும் ஒரு மூலையிலே நடந்த காரியமல்லவென்றாலும் இவைகளைச் சொல்லிப் பெருமையடித்துக் கொள்ளும்படியாகவா பவுல் முயன்றிருப்பார்? கண்டிப்பாக அப்படியிருக்க நியாயமில்லை. ஏனெனில், கிறிஸ்துவுக்காக தனக்கு லாபமாயிருந்தவைகளையெல்லாம் நஷ்ட மென்று எண்ணியவராயிற்றே இந்தப் பவுல் (பிலி. 3:7). அப்படியானால், இது மூலையிலே நடந்த காரியமல்லவென்று எதைப் பற்றித்தான் சொல்லி யிருப்பார்? சொல்லுங்கள். கண்டிப்பாக, பவுலின் நம்பிக்கை நாயகரா யிருந்த இயேசு பற்றிய காரியங்களைத்தான் இது ஒரு மூலையிலே நடந்த காரியமல்லவென்று சொல்லியிருப்பாரேயொழிய வேறொன்றைப் பற்றியு மிருக்காது.

இயேசு பற்றிய காரியங்கள் எதுவும் ஒரு மூலையிலே நடந்தவை அல்ல. ஆம், அவருடைய பிறப்பு பற்றிய அறிவிப்பு, அவருடைய வாழ்க்கை, அவருடைய ஊழியம், அவருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல், அவர் வாக்களித்துக் கட்டின சபையின் ஆரம்பம், அதன் வளர்ச்சி இப்படி எதுவுமே மூலையிலே நடந்ததல்ல. எல்லாமே வெட்ட வெளிச்சமானவையே. ஆயினும், இவை எல்லாவற்றையும் நாம் இங்கே பார்க்க முடியாதாகை யால், ஒரு மூன்றை மாத்திரம் நமக்காக இங்கே எடுத்துக்கொண்டு சில பாடங்களைக் கற்றுக்கொள்ளுவோம்.

## I. கிறிஸ்துவின் முதலாம் வருகை ஒரு மூலையிலே நடந்த ஒன்று அல்ல.

" *இது ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல* " என்ற தலைப்பின் கீழாக நமக்குக் கிடைக்கும் முதலாவது பாடம், இயேசுவின் முதலாம் வருகை பற்றிய காரியங்கள் எதுவுமே ஒரு மூலையிலே நடந்தவை அல்ல என்பது.

அப்போஸ்தலன் பவுல், அகிரிப்பா ராஜாவுக்கு முன்பாக இது ஒரு மூலையிலே நடந்த காரியமல்லவென்று சொல்லும் போது, கிறிஸ்துவின் முதலாம் வருகையை மனதில் கொண்டவராகவும் பேசியிருக்க வேண்டும். எப்படியெனில், அவர் எந்த நம்பிக்கைக்காகக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றப் பட்டாரோ அந்த நம்பிக்கைக்கு அடித்தளமே கிறிஸ்துவின் முதலாம் வருகையும், அதைத் தொடர்ந்து நடந்த சம்பவங்களும் தான்.

அந்த முதலாம் வருகையின் அபாரம் பற்றி, வேதாகமம் பல ஆச்சரியமான தகவல்களை நமக்கு அள்ளிக் கொடுக்கிறது. அவருடைய பிறப்பு முதல், உயிர்த்தெழுதல் வரைக்குமான சகல காரியங்களும் தீர்க்க தரிசிகளால் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே முன்னுரைக்கப்பட்டு, துல்லியமாகப் பேசப்பட்டுள்ளது. ஆம், அவர் கன்னியின் வயிற்றிலே பிறப்பார், கள்வர்களுடன் மரிப்பார், ஐசுவரியவானுடைய கல்லறையில் அடக்கம் பண்ணப்படுவார் என்று ஏசாயாவும் (7:17, 53:9-12), யூதேயாவி லுள்ள பெத்லகேமிலே பிறப்பார் என்று மீகாவும் (5:2), எகிப்துக்குப் போவார் என்று ஓசியாவும் (11:1) முப்பது வெள்ளிக் காசுக்குக் காட்டிக் கொடுக்கப் படுவார் என்று சகரியாவும் (11:12-13) கூறியுள்ளனர். இவைகள் போதாது என்பது போல, சங்கீதங்களிலே, அவர் காட்டிக் கொடுக்கப்படுவது (41:9), அவருடைய கைகளிலும், கால்களிலும் ஆணிகள் உருவப்படுவது (22:16) காடியைக் குடிக்கும்படிக் கொடுப்பது (69:21) வஸ்திரங்களைச் சீட்டுப் போடுவது (22:10) எலும்புகள் முறிக்கப்படாது என்பது (34:20) மற்றும் அவர் உயிரோடே எழுப்பப்படுவார் என்பது (16:10) போன்ற பல காரியங்கள் அழகாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**அவருடைய பிறப்பு முதல், உயிர்த்தெழுதல் வரைக்குமான சகல காரியங்களும் தீர்க்கதரிசிகளால் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே முன்னுரைக்கப்பட்டு, துல்லியமாகப் பேசப்பட்டுள்ளது.**

இந்தத் தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்ட காரியங்களனைத்தும் பழைய ஏற்பாட்டுப் பக்தர்களால் முறையாக வாசிக்கப்பட்டு, ஓய்வு நாள் தோறும் போதிக்கப்பட்டவை. அவை, எந்தளவு விசுவாசிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப் பட்டதென்பதில் கொஞ்சம் மாறுபட்ட கருத்து இருந்தாலும், இவைகள் வெளிப்படுத்தப்படாதவைகளோ, இரகசியமாக வைக்கப்புட்டவைகளோ அல்லது ஒரு மூலையிலே போட்டு அமுக்கப்பட்டவைகளோ அல்ல என்பது நிச்சயம். தீர்க்கதரிசிகளால் முன் அறிவிக்கப்பட்ட அனைத்தும் புதிய ஏற்பாட்டிலே அப்படியே அட்சரம் பிசகாமல் நிறைவேறியுமுள்ளது. அப்படி யானால், கிறிஸ்துவின் முதலாம் வருகை ஒரு மூலையிலே நடந்ததாக எப்படியிருக்க முடியும்? நிச்சயமாக அது ஒரு மூலையிலே நடந்த ஒன்று அல்ல.

அன்பானவர்களே, இயேசு ஆண்டவரின் முதலாம் வருகை பற்றிய காரியங்களைப் பவுல் “ *இந்தளவு அறிந்திருந்தபடியால் தான்* ” மிகுந்த தைரியமாக, அகிரிப்பா ராஜாவே, “ *இது ஒன்றும் மூலையிலே நடந்த*

*காரியமல்ல* " என்று சொல்ல முடிந்தது. ஆனால், இதை வாசிக்கின்ற நாம் ஒவ்வொருவரும் அவருடைய முதலாம் வருகை பற்றிய காரியங்களில் இவ்வளவு ஆழமான அறிவுகொண்டவர்களாக உள்ளோமா? தயவு செய்து எண்ணிப் பார்ப்போம். இப்படி ஆழ்ந்த அறிவு வேத வசனங்களில் இருந்த படியால் தான், ராஜாக்களுக்கு முன்பாகவும் பயமில்லாமல் சத்தியத்தைச் சத்தமாகச் சொல்ல முடிந்தது. சத்தியத்திற்காக வாழவும் முடிந்தது. நாமும், சத்தியத்திற்காக வாழவேண்டுமானால், அநேகருக்கு சத்திய வசனத்தைப் பயமில்லாமல் தைரியமாக எடுத்துச் சொல்ல வேண்டுமானால், வேத வசனங்களில் தேறினவர்களாக இருப்பது அவசியம். முயற்சிப்போமா?

## II கிறிஸ்துவின் ஊழியம் ஒரு மூலையிலே நடந்த ஒன்று அல்ல

*"இது ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல"* என்ற தலைப்பின் கீழாக நமக்குக் கிடைக்கும் இரண்டாவது பாடம், அவருடைய ஊழிய காரியங்கள் எதுவும் ஒரு மூலையிலே நடந்தவை அல்ல என்பது.

இயேசு எல்லா நீதியையும் நிறைவேற்றும்படி ஞானஸ்நானம் பெற்றுக் கரையேறிய பிறகு, பிசாசினாலே சோதிக்கப்படுவதற்கு ஆவியான வராலே வனாந்திரத்திற்குக் கொண்டு போகப்பட்டார் (மத். 4:1) அங்கு அவர் " *வேத வசனங்களைக் கொண்டு* " பிசாசானவனை புறமுதுகு காட்டச் செய்ததற்குப் பிறகு, " *மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபித்திருக் கிறது* " என்று பிரசங்கிக்கத் தொடங்கினார். *அப்பொழுது தம்மண்டை வந்த ஆயிரக்கணக்கானவர்களுக்கு ஆத்தும குணத்திற்கான பிரசங்கத்தோடு நிறுத்தாமல் சரீர சுகத்தையும் சேர்த்து வழங்கினார்* (மத். 4:23) மருத்துவ விஞ்ஞானம் விண்ணை முட்டியிருக்கும் இந்த நாட்களிலே கூட, அற்புத சுகம் எனறு பொய்யாக விளம்பரம் செய்தால் கூட கூட்டம் வாயைத் திறந்து கொண்டு அலை மோதுகிறதை நாம் பார்க்கிறோம். அப்படியானால், அந்த நாட்களில் அவரால் நடப்பிக்கப்பட்ட அற்புதங்களுக்கு எவ்வளவு பவிசும், மவுசும் இருந்திருக்குமென்று எண்ணிப்பாருங்கள்! இதுபற்றி மத்தேயு ஆசிரியர், அவருடைய கீர்த்தி சீரியா எங்கும் பிரசித்தமாயிற்று. அப்பொழுது பலவித வியாதிகளையும், வேதனைகளையும் அடைந்திருந்த சகல பிணியாளிகளையும், பிசாசு பிடித்தவர்களையும், சந்திரரோகிகளையும்; திமிர்வாதக்காரரையும் அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். அவர்களைச் சொஸ்தமாக்கினார். கலிலேயாவிலும் தெக்கப்போலியிலும், எருசலேமிலும், யூதேயாவிலும், யோர்தானுக்கு அப்புறத்திலும் இருந்து திரளான ஜனங்கள் வந்து அவருக்குப் பின்சென்றார்கள் (மத். 4:24,25) என்று எழுதிக் கொடுத் துள்ளார். ஆக, "*இவருடைய கீர்த்தி பெலஸ்தினா தேசமெங்கும் கொடி கட்டிப் பறந்திருக்கிறது* ". இப்படித் திக்கெட்டும் போர் முரசு கொட்டிய ஊழியம் பற்றி, இது ஒரு மூலையிலே நடந்த ஒன்று என யாராவது சொல்ல முடியுமா?.

**அற்புத சுகம் என்று பொய்யாக விளம்பரம் செய்தால் கூட கூட்டம் வாயைத் திறந்து கொண்டு அலை மோதுகிறதை நாம் பார்க்கிறோம். அப்படி யானால், அந்த நாட்களில் அவரால் நடப்பிக்கப்பட்ட அற்புதங்களுக்கு எவ்வளவு பவிசும், மவுசும் இருந்திருக்குமென்று எண்ணிப்பாருங்கள்!**

இன்னும், அவர் தன்னுடைய ஊழியத்தின் நாட்களில் *"மரித்தவர் களையும் உயிரோடே எழுப்பினார்"*. ஆம், கண்ணீரும் கம்பலையுமாகத் தன் முன் வந்து நின்ற நாயீன் ஊர் விதவையின் மகனையும் (லூக். 7:14), தலைவன் ஒருவனுடைய மகளையும் (மத். 9:18,23), மரித்து நான்கு நாளாகி நாற்றமெடுத்த நிலையிலிருந்த பெத்தானியா ஊரானாகிய லாசருவையும் உயிரோடே எழுப்பினார் (யோவா. 11:43). மரித்தவர்களை உயிரோடே எழுப்பின செய்தியை யாராவது மூடி போட்டு மறைக்க முடியுமா? காட்டுத் தீ போலல்லவா பரவியிருக்கும்.

இதற்கு மேலாக, அவருடைய ஊழியமும், வாழ்க்கையும் ஒரு மூலையிலே நடந்த காரியம் அல்ல என்பதற்கு, அவருடைய மரணமும் உயிர்த்தெழுதலும் ஒரு பலமான சான்றாக உள்ளது. ஆம், இயேசு சிலுவை யிலறையப் பட்டு பிதாவின் கைகளில் ஆவியை ஒப்புக்கொடுக்கும் முன்பாக பூமியெங்கும் அந்தகாரமுண்டாயிற்று (லூக். 23:44) பகலிலே திடீரென இருளாகும் போது, ஏன் இப்படி என்ற பயம் கலந்த கேள்வி எங்கும் எழுந்திருக்கும் தானே! அதற்கான பதிலை எல்லாரும் பெற்ற பின்தானே அமைதியடைந்திருப்பார்கள். அப்படியானால், இயேசுவின் மரணமும் யாருக்கும் தெரியாமல் ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல. அதுபோல் தான் அவருடைய உயிர்த்தெழுதலும். எப்படியெனில், எம்மாவுக்கு நடந்து சென்ற சீடர்களில் ஒருவன், கூட வருவது இயேசு என்று தெரியாமல், *"…..இந்நாட்களில் எருசலேமில் நடந்தவைகளை அறியாதபடிக்கு நீர் அந்நியராயிருக்கிறீரோ என்றான்* " (லூக். 24:18). அந்தளவு அவருடைய உயிர்த்தெழுதல் பிரபலம்.

இப்படி பூமியெங்குமுள்ளவர்கள் அனைவரும் அறியும்படியாக நடந்த இயேசுவின் ஊழியம் பற்றி நீங்கள் எந்தளவு அறிந்து வைத்துள்ளீர் கள்? இயேசுவை தேவன் ஒரு நோக்கத்தோடு பூமிக்கு அனுப்பிக் கொடுத்தார் என்பதும், அந்த இயேசு தன்னை அனுப்பின பிதாவின் சித்தத்தை நிறை வேற்றும்படியானதொரு ஊழியத்தைச் செய்தார் என்பதும் உங்களுக்குத் தெரியுமா? இல்லையா? தெரியுமானால், அந்த ஊழியத்திற்கான பலனை உங்கள் வாழ்க்கையில் பெற்று விட்டீர்களா? " *பாவிகளை இரட்சிக்க இயேசு வந்தார்* " என்று வசனம் சொல்லுகிறதே (1தீமோ. 1:15) அப்படியானால், பாவ மன்னிப்புக்கென்று நீங்கள் இரட்சிப்படைந்து விட்டீர்களா? இல்லை யென்பது உங்கள் பதிலாக இருக்கு மானால், அதற்கான முயற்சியை, வேத வசனங்களின்படி இப்பொழுதே எடுத்து ஆத்தும இரட்சிப்படையுங்கள்.

## III கர்த்தருடைய சபையின் ஆரம்பம் ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல.

" *இது ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல* " என்ற தலைப்பின் கீழாக நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு பாடம், கிறிஸ்துவின் சபையின் ஆரம்பம் ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல என்பது.

இன்றைக்கு அநேகரிடம் இயேசுவாலே வாக்களிக்கப்பட்டு (மத். 16:18) தம்முடைய இரத்தத்தைச் சிந்தி சம்பாதித்த (அப். 20:28) சபையைக் குறித்துப்

பேசினால், ஏதோ இந்தச் சபையின் ஆரம்பம் ஒரு மூலையிலே நடந்த ஒரு சம்பவம் போல கிறிஸ்துவின் சபை பற்றி நாங்கள் கேள்விப்பட்டதே இல்லை யென்று கூறுகின்றனர். அப்படிக் கூறுவது ஆன்மீகக் காரியங்களில் அவர் களுக்குள்ள அறியாமையை வெளிப்படுத்துகிறதென்பது கூட அவர் களுக்குத் தெரியவில்லை பாவம்.

மத உலகில், இன்றைக்கு எப்படித் தங்களைப் பெரிய மனிதர்கள் என்று கூறிக்கொள்ளும் அநேகருக்குக் கிறிஸ்துவால் கட்டப்பட்ட ஒன்றான மெய் சபை விளங்காமலிருக்கிறதோ அது போலத்தான், அன்றைக்கு அரியணையில் வீற்றிருந்த அகிரிப்பாவுக்கும் புரியாத ஒன்றாகவே இருந் துள்ளது. புரிந்து கொள்ள வேண்டிய ஒன்றைப் புரியாமலிருந்த அகிரிப்பாவும், அவனோடிருந்தவர்களும் புரிந்து கொள்ளும்படியாகவே, இது ஒரு மூலையிலே நடந்த காரியம் அல்ல என்று அழுந்தக் கூறினார் பவுல்.

இதை வாசிக்கும் அன்பானவர்களே, அகிரிப்பா இருக்கட்டும், இப்பொழுது உங்களைப் பார்த்துக் கேட்கிறேன், கிறிஸ்துவின் சபையை நீங்கள் அறிந்தும், புரிந்தும் வைத்துள்ளீர்களா? ஒருவேளை, நீங்கள் அறியாமலிருந்தால் அதுபற்றிக் கூறுகிறேன் கொஞ்சம் கவனியுங்கள். இச்சபை இயேசு பரமேறிய பின் வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளில், எருசலேம் பட்டணத்தில் ஆரம்பமாகியிருந்தாலும் (அப். 2ம் அதி), உண்மை யில் இதுபற்றிய காரியங்கள் பழைய ஏற்பாட்டின் காலத்திலேயே வெளிப் படத் துவங்கிவிட்டது. கிறிஸ்துவால் கட்டப்பட்ட சபை குறித்து சுமார் 700 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஏசாயா தீர்க்கன், *"கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்"* என்று கூறியுள்ளார். (ஏசாயா 2:2) தானியேல் தீர்க்கன், *"அந்த ராஜாக்களின் நாட்களிலே பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார்"* என்று சொல்லியுள்ளார் (தானி. 2:44). இவர்கள் சொன்னது தான், அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில் அப்படியே நிறைவேறியுள்ளது. கிறிஸ்துவின் சபை, ஏதோ நேற்று பெய்த மழையில் இன்று முளைத்த ஒரு காளானல்ல. அல்லது, இருக்கின்ற நூற்றுக்கணக்கான பிரிவினை சபை கூட்டங்களில் இதுவும் ஒன்றல்ல.

**மத உலகில், இன்றைக்கு எப்படித் தங்களைப் பெரிய மனிதர்கள் என்று கூறிக்கொள்ளும் அநேகருக்குக் கிறிஸ்துவால் கட்டப்பட்ட ஒன்றான மெய்ச் சபை விளங்காமலிருக்கிறதோ அது போலத்தான், அன்றைக்கு அரியணையில் வீற்றிருந்த அகிரிப்பாவுக்கும் புரியாத ஒன்றாகவே இருந்துள்ளது.**

கிறிஸ்துவின் சபை, தேவனால் திட்டமிடப்பட்டு (எபேசி 3:9-11) பழைய ஏற்பாட்டுத் தீர்க்கர்களால் முன்னுரைக்கப்பட்டு (ஏசாயா 2:2), யோவான் ஸ்நானகனால் பிரசங்கிக்கப்பட்டு (மத். 3:17) இயேசுவாலே வாக்களித்துக்


கட்டப்பட்டு, (மத். 16:16-18; அப். 2ம் அதி) பெந்தெகொஸ்தே நாளில், எருசலேம் பட்டணத்தில் 17 தேசத்தார் கூடியிருந்த போது மகத்தான முறை யில் ஆரம்பமாகியுள்ளது. அன்று, ஆயிரக்காணக்கானவர்கள் கூடியிருந்த ஒரு பெரிய கூட்டத்தில் பேதுரு செய்த பிரசங்கத்தைக் கேட்டு 3000 பேர் இரட்சிக்கப்பட்டுள்ளனர் (அப். 2:41).

வேத வசனங்களின்படி உண்மை இதுவாக இருக்கும் போது, கிறிஸ்துவின் சபை பற்றி எனக்குத் தெரியாது என்று ஒருவர் எப்படிச் சொல்ல முடியும்? அப்படிச் சொல்வதற்கு *"கிறிஸ்துவின் சபையின் ஆரம்பம் என்ன ஒரு மூலையிலே நடந்த காரியமா?"* நிச்சயமாக அப்படி இல்லை. கிறிஸ்துவின் சபை வேத வசனங்களின் ஒட்டுமொத்த நிறை வேறுதல். இதிலே யாருக்கும் எந்தச் சந்தேகமும் வேண்டாம். அப்படிச் சந்தேகப்படுவீர்களானால், பரலோகம் உங்களுக்கு சந்தேகமாகிவிடும். இது உண்மை!

அருமையானவர்களே, இப்படிப்பட்ட கிறிஸ்துவின் சபையில் நீங்கள் அங்கமாக இல்லையானால், அகிரிப்பாவும், பெஸ்துவும், பேலிக்ஸ்ம் எங்கே சென்றார்களோ அங்கே நீங்களும் செல்ல நேரிடும். வேண்டாம், வேண்டாவே வேண்டாம். இன்றே, கிறிஸ்துவால் கட்டப்பட்ட சபையில், விசுவாசித்து (எபி. 11:6), மனந்திரும்பி (II கொரி. 7:10), அறிக்கையிட்டு, (அப். 8:37) பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்று (அப். 22:16), கர்த்தராலே சபையில் சேர்க்கப்படுங்கள். மறுமையை தேவாதி தேவனோடு கழியுங்கள். ஆமென்!

## நாளும், நடப்பும்

* தமிழக டிஜிபிக்கு தேசிய மனித உரிமை ஆணையம் நோட்டீஸ்
* தில்லியில் தாக்குதல் நடத்த பயங்கரவாதிகள் சதி; பிரதமர், சோனியாவுக்கு பாதுகாப்பு அதிகரிப்பு
* இலங்கை அகதிகளுக்கு ரூ. 25 கோடியில் 2,500 வீடுகள் – தமிழக அரசு.
* மியாமன் நாட்டின் எதிர்க்கட்சித்தலைவர் ஆங்சான் சூச்சி பாரதப் பிரதமரைச் சந்தித்தார்.
* இந்தியா–இங்கிலாந்து கிரிக்கெட் போட்டிகள் தோனிக்கு அக்னிப் பரீட்சையாக இருக்கப்போகிறது.
* சீனாவின் புதிய அதிபராக ஜீ ஜின்பிங்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.



# ஏன் நாங்கள் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறோம்?

**J.C. சோட்**

கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுதல் பற்றி வேத வசனங்கள் நிறைய இடங்களில் பேசுகிறது. அவைகளில் சிலவற்றை நாம் கவனிப்போம். முன்பொரு காலத்தில் யோவேல் இப்படியாக தீர்க்கதரிசனம் உரைத்தார், "*அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும், உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள். மேலும் ஊழியக்காரர், ஊழியக்காரிகள் மேலும், அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன். வானத்திலும் பூமியிலும் இரத்தம் அக்கினி புகைஸ்தம்பங்களாகிய அதிசயங்களைக் காட்டுவேன். கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருமுன்னே சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்தமாகவும் மாறும். அப்பொழுது, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப் படுவான்; கர்த்தர் சொன்னபடி, சீயோன் பர்வதத்திலும், எருசலேமிலும் கர்த்தர் வரவழைக்கும் மீதியாயிருப்பவர்களிடத்திலும் இரட்சிப்பு உண்டாயிருக்கும்* " (யோவேல் 2:28-31).

பரிசுத்த ஆவி அப்போஸ்தலர்கள் மேல் ஊற்றப்பட்ட பிறகு, அவர்கள் பற்பல மொழிகளில் பேசத் தொடங்கினார்கள்; அங்கே கூடியிருந்தவர்கள் அப்போஸ்தலர்களால் எப்படி இப்படிப் பேச முடிகிறது என்று சொல்லி வித்தியாசமான முடிவுகளுக்கு வந்தார்கள். சிலர் அப்போஸ்தலர்கள் மதுபானத்தினால் நிறைந்திருந்ததாக எண்ணினார்கள். அதன் பின்பு நாம் இப்படி வாசிக்கிறோம். "*அப்பொழுது பேதுரு பதினொருவரோடுங் கூட நின்று, அவர்களை நோக்கி, உரத்த சத்தமாய்; யூதர்களே, எருசலேமில் வாசம் பண்ணுகிற ஜனங்களே, நீங்களெல்லாரும் அறிந்து கொள்வீர் களாக, என் வார்த்தைகளுக்குச் செவிகொடுங்கள். நீங்கள் நினைக்கிறபடி இவர்கள் வெறி கொண்டவர்களல்ல, பொழுது விடிந்து மூன்றாம் மணி வேளையாயிருக்கிறதே. தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்ட படியே இது நடந்தேறுகிறது. கடைசி நாட்களில் நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும், உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் வாலிபர்கள் தரிசனங்களை அடைவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங் களைக் காண்பார்கள்; என்னுடைய ஊழியக்காரர்மேலும் என்னுடைய ஊழியக்காரிகள்மேலும் அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள். அல்லாமலும் உயர வானத்திலே அற்புதங்களையும், தாழபூமியிலே இரத்தம், அக்கினி, புகைக்காடாகிய அதிசயங்களையும் காட்டுவேன். கர்த்தருடைய பெரிதும், பிரகாசமுமான நாள் வருமுன்னே சூரியன் இருளாகவும், சந்திரன்*

*இரத்தமாகவும் மாறும். அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான் என்று தேவன் உரைத்திருக்கிறார்* (அப். 2:14-21) என்று.

அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் பரிசுத்த ஆவி அப்போஸ்தலர்கள் மேல் ஊற்றப்பட்ட பிறகு அவர்கள் கிறிஸ்துவின் வருகையைக் குறித்தும், தாம் தேவனிடத்திலிருந்து வந்தவர் என்பதை நிரூபிப்பதற்காக இயேசு செய்த அற்புதங்கள் பற்றியும் அவருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் பற்றியும் அவர் தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருந்து கர்த்தாதி கர்த்தாவாகவும், ராஜாதி ராஜாவாகவும் ஆட்சி செய்வதற்கு பிதாவினிடத்தில் திரும்பிப் போவது குறித்தும் பிரசங்கித்தார்கள். இவைகளைக் கேட்டு ஏறக்குறைய மூவாயிரம் பேர் தங்கள் இருதயங்களில் குத்தப்பட்டு தாங்கள் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என அறிய விரும்பின போது, இப்படியாக அவர்களுக்குப் பதிலளிக்கப்பட்டது. "*பேதுரு அவர்களை நோக்கி; நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி; இன்னும் அநேக வார்த்தைகளாலும் சாட்சி கூறி, மாறுபாடுள்ள இந்த சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள் என்றும் புத்தி சொன்னான். அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத் தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்* " (அப். 2:38-42).

இப்போது, இங்கே அநேக காரியங்களை நாம் கவனிப்போம். முதலாவது, பேதுரு, கர்த்தர் ஜனங்களை அழைப்பது பற்றி குறிப்பிட்டிருக்கிறார். இதைக் கர்த்தர் எப்படி செய்கிறார்? தெசலோனிக்கேயா பட்டணத்திலிருக்கிற கிறிஸ்தவர்கள் பற்றி இப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது. "*நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையை அடையும் பொருட்டாக எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார்* " என்று (II தெச. 2:14). இதையே வேறு விதமாகச் சொன்னால், பவுல் பிரசங்கித்த சுவிசேஷத்தினாலே அவர்கள் அழைப்பட்டிருந்தார்கள். அது என்ன சுவிசேஷம்? ரோமர் 10:15-ல், அது கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் பற்றிய நற்செய்தியாயிருந்தது. மேலும், இரட்சிப்பு கர்த்தருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலினால் சாத்தியமானது (I கொரி. 15:1-4). அதுபோலவே, ஒருவர் இரட்சிக்கப்பட வேண்டுமானால் நற்செய்தியின் நிபந்தனைகளுக்கு உட்பட வேண்டும். அடுத்ததாக, அந்த நிபந்தனைகள் முதலில் ஒருவர் கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும், ஒருவர் தன்னுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும், கடைசியாக, ஒருவர் தன் பாவங்களிலிருந்து மன்னிப்புப்பெற ஞானஸ்நானம் பெறவேண்டுமென்ற நிபந்தனை இருந்தது.

இவைகள் எல்லாமே அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் இரண்டாம் அதிகாரத்தில் பிரசங்கம் செய்யப்பட்டிருக்கிறது; அதாவது, அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலைப் பிரசங்கித்திருக்கிறார்கள். ஏறக்குறைய மூவாயிரம் பேர் விசுவாசிகளாகி இரட்சிக்கப்பட வேறு ஏதாவது செய்யவேண்டுமா என அறிய விரும்பினார்கள். அவர்கள் விசுவாசிகளாக தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, பாவமன்னிப்புப் பெற ஞானஸ்நானம் பெறவேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது. சுவிசேஷ பிரசங்கத்தின் மூலமாக கர்த்தர் தமக்குக் கீழ்ப்படியும்படி அழைப்பு விடுத்திருந்தார். ஏற்கனவே, குறிப்பிட்டபடி ஏறக்குறைய மூவாயிரம் பேர் அந்த அழைப்புக்குப் பதிலளித்து கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தார்கள், அங்கே கர்த்தர் தன்னுடைய பங்காக அவர்களை இரட்சித்துத் தம்முடைய சபையிலே சேர்த்தார்.

இரண்டாவது, ஒருநாள் வரும் அதில் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான் என்று யோவேலினால் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது. பேதுருவும், அப்போஸ்தலர்களும் பெந்தெகொஸ்தே நாளில் ஜனங்களிடத்தில் இந்த தீர்க்கதரிசனம் அவ்வேளையில் நிறைவேறிற்று என்று சொன்னார்கள். அப்படியென்றால், அவர்கள் இரட்சிக்கப்படும்படி கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுதல் என்றால் என்ன? அநேகர் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுதல் என்றால் அது இரட்சிக்கும்படி கர்த்தரிடம் கேட்பது என்று சொல்கிறார்கள். அதாவது, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுதலும் ஜெபமும் சமம் என்று சொல்வார்கள். ஆனால், இரட்சிப்போடு சம்பந்தப்படுத்தி ஜெபம் எங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது? உண்மையாகவே, கிறிஸ்து பிரசங்கிக்கப்பட்டு, அவர்கள் தங்கள் இருதயங்களில் குத்தப்பட்ட பிறகு அல்லது கிறிஸ்துவில் விசுவாசிகளான பிறகு, அவர்கள் என்ன செய்ய வேண்டுமென்று அறிய விரும்பினார்கள். அவர்கள் மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று பேதுரு சொன்னார். ஏறக்குறைய மூவாயிரம் பேர் பேதுரு சொன்னதைச் செய்தார்கள் என்றும், இரட்சிக்கப்பட்டவர்களைக் கர்த்தர் தம்முடைய சபையில் சேர்த்தார் என்றும் வேத வசனங்கள் சொல்கிறது. எனவே, கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்வதென்பது கர்த்தருக்குக் கீழ்ப்படிதலைக் குறிக்கிறது என்கிற முடிவுக்கு நாம் வருகிறோம். வேறு விதமாகச் சொன்னால், ஒருவரோ அல்லது அதற்கு மேலோ தமக்குக் கீழ்ப்படிந்தால், அவர்களை இரட்சிப்பதாக கிறிஸ்து வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் (மாற்கு 16:15,16). எனவே, ஒருவர் கர்த்தருக்குக் கீழ்ப்படியும் போது, தன்னுடைய கீழ்ப்படிதல் மூலமாக கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, தன்னை இரட்சிக்கும் படியான தமது வாக்குத்தத்ததை நிறைவேற்றும்படி கர்த்தரிடம் வேண்டுகோள் விடுக்கிறார். அப்பொழுது அவர் அப்படிச் செய்கிறார்.

மூன்றாவது, ஒரு நாள் வரும் அப்பொழுது கர்த்தர் மாம்சமான யாவர் மேலும் தம் ஆவியை ஊற்றுவார் என்று தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டுள்ளது. அவர் அந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றியிருக்கிறார். அவர் தொடர்ந்து அந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றி வருகிறார்.

பெந்தெகொஸ்தே நாளிலே கர்த்தர் தம்முடைய ஆவியை ஊற்றினார் அல்லது பரிசுத்த ஆவியினாலே அப்போஸ்தலர்களை ஞானஸ்நானப்படுத்தினார்; அப்போஸ்தலர்கள் மூலமாக, அவர்களுடைய பிரசங்கம் பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலின்படியே கர்த்தருடைய வார்த்தையைப் பதிவு செய்ததன் மூலமாக முழு உலகமும் ஆசீர்வதிக்கப்படும்படி கர்த்தர் பரிசுத்த ஆவியினால் அப்போஸ்தலர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்தார். அப்போஸ்தலர்களுடைய பிரசங்கத்தின் விளைவாக கர்த்தருக்கு கீழ்ப் படிந்தவர்களெல்லாம் இரட்சிக்கப்பட்டது மட்டுமின்றி, அவர்களுக்குப் பரிசுத்த ஆவியும் கொடுக்கப்பட்டது. இது பெந்தெகொஸ்தே நாளில் அங்கே இருந்தவர்களுக்கு மாத்திரமல்ல, அவர்களுடைய பிள்ளைகளுக்கும் அல்லது வருங்கால சந்ததியாருக்கும், தூரத்தில் இருந்தவர்களுக்கும் அதாவது, புறஜாதி மக்களுக்கும் கொடுக்கப்பட்டது. சிறிது காலத்திற்குப் பின் புறஜாதிகளும் தேவனாலும், யூதர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டார் கள் என்பதை நிரூபிக்கும் பொருட்டு கொர்நேலியும் அவன் வீட்டாரும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றார்கள். அப்போஸ்தலர்களும், கொர்நேலியுவின் வீட்டாரும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றது மாத்திரமின்றி, அத்தோடு அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளை யார் மீது வைக்கிறார்களோ அவர்களும் பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றுக்கொண்டார்கள். அப்போஸ்தலர்கள் தவிர மற்றவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியின் அற்புத அடையாளங்கள் செய்ய முடியாத அளவிலான பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளத்தக்கதான அதிகாரத்தை அப்போஸ்தலர்கள் கர்த்தரிடமிருந்து பெற்றுக்கொண்டார்கள். இது நம்முடைய காலம் வரை தொடர்ந்து வருகிறது. எனவே, கர்த்தர் தம்முடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றியிருக்கிறார்; ஒவ்வொரு விஷயத்திலும் கர்த்தருடைய வார்த்தை நிறைவேறி வருகிறது.

ரோமர் 10:8-7 வசனப்பகுதியில் இதன் எழுத்தாளர், ஒருவர் இரட்சிக் கப்படும்படி கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ள வேண்டும் என்று குறிப்பிடுவதைத் தயவு செய்து கவனியுங்கள். இப்படிச் சொல்வதின் பொருள் என்ன? வசனப்பகுதியின் பின்னணியை வைத்துப் பார்க்கும் போது, தேவனு டைய வார்த்தை பிரசங்கிக்கப்பட வேண்டும் என்று பார்க்கி றோம், ஒருவர் அதைக் கேள்விப்பட்டு, விசுவாசித்து, கிறிஸ்துவை அறிக்கை செய்ய வேண்டும். மனந்திரும்புதலும், ஞானஸ்நானமும் இங்கே குறிப்பாக சொல்லப்படவில்லை என்றாலும், தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிப் பதன் ஒரு பகுதியாகவும், கர்த்தரில் விசுவாசம் வைப்பதின் ஒரு பகுதி யாகவும் இது உள்ளது.

இரட்சிப்பிற்காக நீங்கள் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டுவிட்டீர்களா? நாங்கள் இப்படிச் சொல்லும் போது ஜெபத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கவில்லை. கர்த்தருக்குக் கீழ்ப்படிவது சம்மந்த மாக பேசுகிறோம். தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிவதன் மூலமாக அவரைத் தொழுதுகொண்டால், உங்களை இரட்சிப்பதன் மூலமாகவும், தம்முடைய சபையில் சேர்ப்பதன் மூலமாகவும் உங்களுக்கு அவர் பதிலளிப்பார். இரட்சிக்கப்படுவதற்கு இது தவிர வேறு வழி இல்லை.

பெண்கள் பகுதி

# பாலைவனச் சோலை

**ரேச்சல் இராஜநாயகம்**

நியாயாதிபதிகளின் காலத்தில் நடந்த ஒரு உண்மைச் சம்பவம். தான் இந்த ரூத் புத்தகம். மிக அழகாக, சுருக்கமாக ஒரு பெண்ணின் குணநலன்கள் சித்தரிக்கப்பட்டுள்ளது. அன்பு, பக்தி, மீட்பு ஆகிய இம்மூன்றும் இச்சரித்திரத்தில் ஆழமாக பதிந்திருக்கின்றது. மோவாப் என்பது சவக்கடலுக்கு அருகிலுள்ள ஓர் பிரதேசம். இந்த மோவாபியர், லோத்தின் வம்சா வழியாக வந்தவர்கள் என்று நம்பப்படுகிறது. இவர்கள் கேமோஸ் என்கிற தெய்வத்தையும், வேறே பல விக்கிரகங்களையும் வணங்கி வந்தவர்கள்.

நியாதியாதிபதிகள் நியாயம் விசாரித்து வந்த நாட்களில் ஜனங்கள் கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப் போனதினால், தேசத்திலே பஞ்சம் உண்டாயிற்று. எனவே பெத்லேகம் ஊரானாகிய எலிமலேக்கு தன் மனைவியாகிய நகோமியுடனும், மக்லோன், கிலியோன் என்னும் தன் இரண்டு குமாரரோடும் கூட மோவாப் தேசத்திற்குப் போய் அங்கே இருந்தான். (ரூத் 1:2) பஞ்சம் பிழைக்கப் போன அந்த தேசத்திலே எலிமலேக்கு இறந்து போகிறான். நகோமி தன் இரு குமாரர்களுக்கும் மோவாபிய ஸ்திரீகளில் பெண் கொள்கிறாள். அவர்கள் ஒருத்தி பேர் ஒர்பாள், மற்றவள் பேர் ரூத். சற்றேறக்குறைய பத்து வருடம் கழித்து தன் இரு மக்களையும் பறி கொடுத்து நகோமி தன் மருமக்களோடு தனித்தவளாகிறாள். மீண்டும் பெத்லகேமில் கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்கு இரங்கி அவர்களுக்கு ஆகாரம் அருளினார் என்று கேள்விப்பட்டு ஊர் திரும்புகிறாள்.

வரும் வழியில் நகோமி தன் இரண்டு மருமக்களையும் நோக்கி, தங்கள் தாய் வீட்டிற்குத் திரும்பிப் போகும்படி கூறுகிறாள். இருவருமே திரும்பிப் போக மறுக்கின்றனர். (1:10) தொடர்ந்து நகோமி வற்புறுத்த ஒர்பாள் தன் மாமியை முத்தமிட்டுப் போய்விடுகிறாள். ரூத்தோ அவளை விடாமல் பற்றிக் கொள்கிறாள். ரூத் 1:16ல் அதற்கு ரூத் நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மை விட்டுத் திரும்பிப் போவதைக் குறித்து, என்னோடே பேச வேண்டாம். நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம், என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன் என்று கூறி அவள் பின்னே வரத் தீர்மானிக்கிறாள். அவள் உறுதியைக் கண்ட நகோமி அவள் தன்னோடு தொடர்ந்து இருக்க சம்மதிக்கிறாள்.

பிறகு, ரூத், தன் மாமியாகிய நகோமியின் ஆலோசனைப்படி கோதுமை மணி பொறுக்கிக் கொள்ள வயல்வெளிக்குச் செல்கிறாள். அந்த வயல் நிலமானது நகோமியின் உறவின் முறையானும், செல்வந்தனுமாகிய போவாசுக்கு சொந்தமானதாயிருந்தது. அங்கே அவளுக்கு போவாஸின் கண்களில் தயை கிடைத்தது. உன் செய்கைக்குத் தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின் கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக என்றான் (ரூத் 2:12).

பின்பு சுதந்தரவாளியாகிய போவாஸ் சகல ஜனங்களுக்கும், மூப்பருக்கும் முன்பாக மக்லோனின் மனைவியாகிய ரூத்தை தனக்கு மனைவியாகக் கொண்டான். போவாஸ் ரூத்தை அறிந்த போது அவள் கர்ப்பந்தரித்து ஓர் ஆண் பிள்ளையைப் பெற்றாள். அவனுக்கு ஓபேத் என்று பேரிட்டார்கள் (ரூத் 4:17).

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளே! இந்த மோவாபிய ஸ்திரியாகிய ரூத் கிறிஸ்தவப் பெண்களாகிய நமக்கு பல காரியங்களில் முன் மாதிரியாகத் திகழ்கிறாள். ரூத் என்ற பெயருக்கு சிநேகம் அல்லது பட்சம் என்று பொருள்படும். நியாயாதிபதிகள் நியாயம் விசாரித்த நாட்களில் இஸ்ரவேலிலே ஒழுக்கம், பக்தி, நீதி இவைகள் குறைந்து மனம் போன வாழ்ந்து கொண்டிருந்த காலம். பாலைவனமாக காட்சியளித்த அந்நாட்களில் ரூத் அமைதிக்கும், நீதிக்கும், அன்புக்கும் இருப்பிடமாக இருந்து பாலைவனத்தில் ஒரு சோலையாகத் திகழ்கிறாள். மாசில்லா சுத்தமான பெண்ணாக விளங்குகிறாள்.

கணவன் இறந்த பின்பும் தொடர்ந்து தன் மாமியாரோடு வாழ்வதையே தெரிந்து கொண்டாள். தெரிந்து கொள்வதிலே மிகவும் தெளிவாக செயல்படுகிறாள். இனி அவள் சந்திக்கப் போகும் வாழ்க்கை முற்றிலும் வேறுபட்டது. மொழி புதிது, கலாச்சாரம், வணங்கப் போகும் தெய்வம் இப்படி அனைத்தும் புதிய சூழ்நிலை, இருப்பினும் உறுதியாய் தன் மாமியை பின்பற்றுகிறாள். திருமணத்திற்குப் பின் கட்டாயம் ஒவ்வொரு பெண்ணும் தன் கணவன் வீட்டிற்குத் தான் சொந்தக்காரியாக மாறவேண்டும். 1ம் அதிகாரம் 16ம் வசனத்தை வாசிக்கும் போது ரூத்தினுடைய உறுதித்தன்மை நமக்கு விளங்குகிறது. முன் வைத்த காலை பின் வைக்காமல் தன் மாமியோடு துணை போகிறாள்.

பெண்களாகிய நமக்கு இங்கே அருமையான பாடம் ஒன்று உள்ளது. உலகில் எத்தனையோ பிரிவினைக் கூட்டங்கள் மலிந்து கிடக்கின்றன. நாம் அவற்றை எல்லாம் பின்பற்றாமல் எது சரியானது, வேதத்தில் கூறப்பட்டுள்ள சபை எது? கிறிஸ்து அங்கீகரித்த சபை எது? என்று தேடி அதை கண்டுபிடிப்போம். கண்டு கொண்டவுடன் பழைய வாழ்க்கையை முற்றிலும் மறந்து புதிய வழியில் மிக உறுதியாக வசனத்தின் துணையுடன் வெற்றி நடைபோடுவோம்.

வயது சென்ற தன் மாமியை வீட்டிலே ஓய்வு எடுக்க வைத்து விட்டு இவள் வேலை செய்தாள். மாமிக்கு உழைத்து ஆகாரம் கொடுக்க முயன்றாள். இன்றைக்கு எத்தனை பெண்கள் தங்கள் மாமியாரை போஷிக்க விரும்புகின்றனர்? எட்டிக்காயாக கசக்கும் மாமியார், மருமகள்களைத் தான் இன்று சமுதாயம் கொண்டுள்ளது. உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும், உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது (எபே. 6:2,3) என்ற வசனத்தின்படி ஒவ்வொரு பெண்ணும் தங்கள் மாமியை தன் சொந்த தாயாக பாவித்து கனம் பண்ண வேண்டும்.

ரூத் தன் மாமியின் நோக்கத்தை புரிந்து கொண்டு அதன்படி செயல்படுகிறாள். நோக்கமாகிய, திருமணம் தாமதமாகும் பொழுது பொறுமை காட்டுகிறாள். நோக்கத்தை நிறைவேற்ற அவள் தவறான

வழியைக் கையாளவில்லை. தன் பொறுமை குணத்தால் சரீரப் பிரகாரமாகவும், ஆவிக்குரிய ரீதியிலும் செல்வந்தனாய் இருந்த போவாசுக்கு மனைவியாகிறாள். எப்பிராத்தாவிலே இருந்த ரூத்தின் அயலகத்தார் அவளை இஸ்ரவேல் வீட்டைக் கட்டுவித்த இரண்டு பேராகிய ராகேலைப் போலவும், லேயாளைப் போலவும் வாழ்ந்திருக்கச் செய்வாராக என்று வாழ்த்துகிறார்கள் (ரூத். 4:11). அந்நிய தேவர்களை வணங்கி வந்த ரூத் இன்று யெகோவாவின் பிள்ளைகளான இஸ்ரவேல் ஜனங்களின் வரிசையில் இடம்பிடிக்கும் அளவு தகுதியைப் பெற்று விடுகிறாள். ஆண்டவருக்காக வைராக்கியமாக இருக்கும் பொழுது அபரிதமாக நம்மை ஆசீர்வதிக்கிறார்.

ரூத்திற்கு ஓபேத் பிறக்கிறான். ஓபேத் ஈசாயைப் பெறுகிறான். ஈசாயின் வயிற்றில் தாவீது பிறக்கிறான். புகழ்மிக்க ஒரு பேரனுக்கு பாட்டியாகும் சிலாக்கியம் ரூத்திற்கு கிடைக்கிறது. தாவீதின் வம்சத்தில் தான் இரட்சகராகிய இயேசு கிறிஸ்து தோன்றுகிறார். இவ்வாறு இயேசு கிறிஸ்துவின் ஜனனத்தின் வரிசையில் வந்து நிரந்தர ஆசீர்வாதத்திற்கு சொந்தக்காரியாக மாறுகிறாள் இந்த ரூத்.

இவள் மாமியார் போற்றும் மருமகள் மட்டுமல்ல உலகம் போற்றும் மருமகளாக திகழ்கிறாள். இதை வாசிக்கும் சகோதரிகளே! நலமான காரியங்களை தெரிந்தெடுத்து அவற்றில் உறுதியாய் தரித்திருப்போம். தேவன் நம் ஒவ்வொருவருக்கும் கொடுத்துள்ள சுற்றத்தாரை அன்புடனும், பாசத்துடனும், மரியாதையுடனும் வழி நடத்திச் செல்வோம். தேவன் போற்றம் பெண்களாக வாழ்ந்து அவர் கட்டளைகளை நிறைவேற்ற பாடுபடுவோம். தேவனுடைய ஆசீர்வதிக்கும் கரம், தொடர்ந்து நம்மையும், நாம் சார்ந்திருக்கும் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பதாக!!

## ஒன்றின் வல்லமை

1. **ஒரு நல்ல சமாரியன்** எரிகோவுக்குப் போகும் பாதையில் காயப்படுத்தப்பட்ட மனிதனை காப்பாற்றினான் (லூக்கா 10)
2. **ஒரு மனிதன் (மோசே)** தன்னை தகுயில்லாதவனாக எண்ணிலும் கூட பார்வோனை எதிர்கொண்டு மக்களை எகிப்திலிருந்து வெளியே மீட்டுக் கொண்டான் (யாத். 3)
3. **ஒரு பெண் (எஸ்தர்)** காலகாலமாக இருந்து வந்த பாரம்பரியத்தை உடைத்தெரிந்து, ராஜாவின் உள் முற்றத்தில் பிரவேசித்ததினால் இனப்படுகொலையிலிருந்து முழு தேசத்தையும் காப்பாற்றினாள் (எஸ்தர் 4)
4. **ஒரு சிறுபையன் (தாவீது)** ஒன்பது அடி உயரமாயிருந்த ராட்சத கோலியாத்தை எதிர்கொண்டு இஸ்ரவேலர்களை அடிமைத்தனத்திலிருந்து காப்பாற்றினான் (1 சாமு. 17)
5. **ஒரு அடிமைப் பெண்** உலக ராணுவ தலைவன் சுகமாவதற்கு கருவியாகப் பயன் பயன்பட்டாள் (2 ராஜா 5)

வாலிபர் பகுதி

# இரண்டில் ஒன்று

## பென்னி மார்ட்டின்

**வா**லிபர்களாகிய உங்கள் யாவருக்கும் வானவராம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! உங்கள் யாவரையும் மறுபடியும் இந்தக் கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். வாழ்க்கை என்பது தீர்மானங்களால் நிறைந்திருக்கிறது. ஒவ்வொருவரும் செய்யவும், செய்யாமலிருக்கவும் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் நிறைய இருக்கின்றன. எங்கே போகலாம், எங்கே போகக்கூடாது என்றும், யாரிடம் பழகலாம், யாரிடம் பழகக்கூடாது என்றும் வாழ்க்கையில் சில தீர்மானங்களை எடுக்கிறோம். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஒரு மனிதன் எடுக்க வேண்டிய தீர்மானத்தைக் குறித்து (மத். 7:13,14) வசனங்களில் மிக விவரமாகச் சொல்லியிருக்கிறார். “இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது”. அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர். உதாரணமாக, இரு சாலைகள் பிரிகின்ற ஓர் இடத்தில் நீங்கள் நிற்பதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். ஒரு சாலை குண்டும், குழியுமாகவும், கரடுமுரடாகவும் காட்சி அளிக்கிறது. இன்னொரு சாலை நேராகவும், அழகாகவும் காட்சி அளிக்கிறது. அது பயணிப்பதற்குச் சுலபமாகத் தெரிகிறது. நீங்கள் எந்தப் பாதையில் பயணிக்க விரும்புவீர்கள்? பலர் இந்த இரண்டாவது வகை சாலையில் பயணிக்கவே விரும்புவார்கள்.

மேற்கண்ட உதாரணத்தை ஆவிக்குரிய பிரகாரமாகப் பொருத்திப் பார்ப்போம். நாம் எல்லோருமே ஆவிக்குரிய பயணத்தை மேற் கொண்டுள்ளோம். உலகத்தோடு ஒத்துப்போய் அவர்கள் செய்கின்ற காரியங்களை நாமும் செய்துவிட்டால் அந்த விசாலமான பாதையில் பயணிப்பது எளிதே. அந்தப் பாதையில் பயணிக்கும் போது ஒருவர் எவ்வித தியாகத்தையும் செய்ய வேண்டியதில்லை. அதே நேரத்தில் இடுக்கமான வாசல் வழியாய்ப் பயணிப்பதில் பல சிக்கல்கள் இருப்பதால் அதில் பயணிக்கப் பெரும்பாலானவர்கள் விரும்புவதில்லை. இந்த வழிகளைப் பற்றி இயேசு கிறிஸ்து மலைப்பிரசங்கத்தில் நமக்கு என்ன ஆலோசனை சொல்கிறார் என்று கவனிப்போம் (மத். 7:13,14) வசனங்களில் இயேசு இரண்டு வாசல்களையும், இரண்டு வழிகளையும், இரண்டு வகையான மக்களை யும், இரண்டு வகையான இடங்களையும் பற்றிப் பேசுகிறார். அவைகளை நாம் சற்று விரிவாக இப்போது பார்ப்போம்.

### I விரிவான வாசல்

இந்த வாசல் கேட்டுக்கு அழைத்துச் செல்கிற வழிக்கு ஆரம்பமாயிருக்கிறது. இந்த வாசலில் பலர் எவ்வித தியாகமும் செய்யாமல் பயணம் செய்யலாம். இதில் பயணம் செய்ய எதையும் விட வேண்டியதில்லை. இதில் எந்த கட்டுப்பாடுகளும் இல்லாத காரணத்தால் பலர் இந்த வாசலைத் தெரிந்தெடுக்கிறார்கள்.

## II இடுக்கமான வாசல்

இந்த வாசல் ஜீவனுக்குப் போகிற வழிக்கு ஆரம்பமாயிருக்கிறது. அது ஏன் இடுக்கமாயிருக்கிறது? ஏனென்றால், இதில் ஒருவர் பிரவேசிக்கத் தன்னை வெறுத்தலும், கீழ்ப்படிதலும் அவசியமாயிருக்கிறது (மத். 16:24). இங்கே பூமிக்குரிய பொக்கிஷங்களைச் சேர்க்கும் ஆசைக்கு இடமே இல்லை (மத். 6:10,20). மேற்சொல்லப்பட்ட இரண்டு வாசல்களும் வெறும் ஆரம்பம் தான், அடுத்ததாக நாம் அந்த இரண்டு வழிகளை சற்று நெருக்க மாகப் பார்ப்போம்.

## III விசாலமான வழி

கேட்டுக்குப்போகிற வழி விசாலமாயிருக்கிறது. ஏனென்றால், அந்த வழியில் பயணிக்கிறவர்கள் எவ்வித மாற்றத்தையும் செய்ய வேண்டிய தில்லை. உல்லாசமாக, சுதந்திரமாக வாழ விரும்பும் அநேக வாலிபர்கள் இந்த வழியில் பயணிக்க விரும்புவார்கள். மேலும், அவர்கள் திறந்த மனதை உடையவர்களாகவும் எல்லோரிடமும் சகஜமாகப் பழகுபவர்களாக இருப்பார்கள். இன்றைய நாட்களில் பெரும்பாலான மக்கள் காரியங் களைச் சுலபமாக செய்யவும், கஷ்டப்படாமல் வெற்றி பெறவுமே விரும்பு கின்றனர்.

## IV நெருக்கமான வழி

இவ்வுலகில் பெரும்பாலான மக்கள் இந்த நெருக்கமான வழியில் பயணிக்க விரும்புவதில்லை. ஏனென்றால், இதில் பயணிக்க நீதியாக வாழ வேண்டியது அவசியமாகிறது (அப். 10:35). தொன்று தொட்டு நாம் பார்க்கும் போது மக்கள் அநீதியாகவே வாழ்ந்து பழகியிருக்கிறபடியால் இந்த நெருக்கமான பாதையில் பயணிப்பதென்றால் அவர்களுக்குக் கசக்கிறது. மேலும், இந்தப் பாதையில் பயணிப்பவர்களைப் பார்த்து அவர்கள் குறுகிய மனப்பான்மை உடையவர்கள் என்றும், ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள் ளேயே முடங்கிக் கிடப்பவர்களென்றும் குறை கூறுகிறார்கள். ஆனால், இந்த நெருக்கமான வழி நம்மை நேராகப் பரலோகம் அழைத்துச் செல்கிறது என்பதை அவர்கள் பார்க்க மறுக்கிறார்கள். மேலும், (மத். 7:14)ல் இயேசு இந்த வழியைக் கண்டுபிடிக்கிறவர்கள் "சிலர்" என்று சொல்கிறார். கடந்த கால சம்பவங்களை நாம் வேதாகமத்தில் புரட்டிப் பார்த்தால் நோவாவின் நாட்களில் அந்த ஜலப்பிரளத்தின் போது நோவா மற்றும் அவருடைய குடும்பத்தார் உட்பட "எட்டுப்பேர்" மாத்திரமே இரட்சிக்கப்பட்டார்கள். லட்சக்கணக்கான மக்கள் நோவாவின் பிரசங்கத்திற்குச் செவி மடுக்க மறுத்து மடிந்து போனார்கள். வனாந்திர யாத்திரையில் சுமார் ஆறு லட்சம் பேர் பயணம் செய்திருந்தாலும் கூட வாக்குத்தத்தம் செய்யப்பட்ட கானான் தேசத்தில் யோசுவா, காலேப் ஆகிய "இரண்டு பேர்" மாத்திரமே பிரவேசித்தார்கள். எனவே, காலகாலமாய் நாம் பார்க்கும் போது இந்த நெருக்கமான வழியைக் கண்டுபிடித்து அதில் பிரவேசிக்கிறவர்கள் ஒரு சிலராகத்தான் இருக்கிறார்கள்.

எனதருமை வாலிபக் கண்மணிகளே! மேற்சொல்லப்பட்ட காரியங் களை வைத்துப் பார்த்தால் ஆவிக்குரிய பயணத்தில் நாம் எந்த நிலையில்

இருக்கிறோம்? கேட்டுக்குப் போகிற விசாலமான வழியில் பயணிக்கிறோமா? அல்லது நித்திய ஜீவனுக்கு அழைத்துச் செல்லும் நெருக்கமான வழியில் பயணிக்கிறோமா? வானவராம் இயேசுவை வாழ்வாதாரமாகக் கொண்டு வாழும் வாலிபர்கள் துன்மார்க்கருடைய ஆலோசனையின்படி நடக்கக்கூடாது என்றும், பாவிகளுடைய வழியில் நிற்கக்கூடாது என்றும் எச்சரிக்கப்பட்டிருக்கிறோம் (சங். 1:1). இன்று வாலிபர்கள் மிகவும் பணம், புகழ், பதவி போன்றவைகளை நாடி விசாலமான வழியில் பயணிக்கிறார்கள். நீதி, நியாயம், நேர்மை போன்றவைகளைக் குழிதோண்டிப் புதைத்து விட்டு மனம்போன போக்கில் போய் வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள்.

ஆனால், இந்த உலகமும், உலகத்திலுள்ளவைகளும் ஒரு நாளில் அழிந்து போகும். அழியாத நம் ஆத்துமாவைக் காத்துக் கொள்ள பிரயாசப்பட வேண்டும். அநித்தியமான பாவ சந்தோஷங்களை நம்மை விட்டு அகற்றி விட்டு தேவன் நமக்காக வைத்திருக்கிற நித்திய ஜீவனை சுதந்தரிக்க அந்த நெருக்கமான வழியில் பயணிக்க வேண்டும். அந்த நெருக்கமான பாதையில் இயேசுவை நோக்கிப் பயணிக்கும் போது இடையில் தோன்றும் தடைக்கற்களையெல்லாம் வெற்றிப்படிகளாக மாற்ற அவரால் முடியும். நம்மை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய நமக்குப் பெலனுண்டு (பிலி. 4:13). இவ்வுலக வாழ்க்கையானது கொஞ்ச காலந்தான், இங்கே நாம் அதிக நாட்கள் வாழும்படியாக நம் சரீரம் வடிவமைக்கப்படவில்லை, நாமும் பாடுகள் நிறைந்த பாழாய்ப் போன உலகத்தில் அதிக நாட்கள் வாழ விரும்புவதில்லை. “ நம் ஜீவன் கொஞ்சக் காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற் போகிற புகையைப் போலிருக்கிறது” என்று யாக்கோபு சொல்கிறார் (யாக். 4:14). இப்படி நாம் வாழ்கின்ற இந்த கொஞ்ச நாட்களில் இந்த நெருக்கமான வழியில் பயணித்தால் தேவனோடு நெருக்கமான உறவை ஏற்படுத்திக் கொண்டு, நேசர் தம் கரங்களை நீட்டி அழைக்கின்ற அந்த மோட்சக் கரையை அடைவோம் என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை. அதற்குத் தேவன் தாமே நமக்கு உதவி செய்வாராக! ஆமென்.

## தேவனுக்கு உரிமையும், அதிகாரமும் உண்டு

**தேவனுக்கு உங்கள் நேரத்தில் ஒரு பங்கை கேட்க உரிமை உண்டு!**
***அவருக்கு முழு நேரத்தையும் எடுத்துக் கொள்ளவும் அதிகாரம் உண்டு!***

**தேவனுக்கு உங்கள் பணத்தில் ஒரு பங்கை கேட்க உரிமை உண்டு!**
***அவருக்கு அவைகள் யாவையும் எடுத்துக் கொள்ளவும் அதிகாரம் உண்டு!***

**தேவனுக்கு உங்கள் நாவுகள் மூலம் மகிமை கேட்க உரிமை உண்டு!**
***அவருக்கு அவைகள் யாவையும் எடுத்துக்கொள்ளவும் அதிகாரம் உண்டு!***

**தேவனுக்கு உங்கள் செல்வாக்கின் மூலம் கனம் கேட்க உரிமை உண்டு!**
***அவருக்கு அவைகள் யாவையும் எடுத்துக்கொள்ளவும் அதிகாரம் உண்டு!***

**தேவனுக்கு உங்கள் வாழ்க்கையைக் குறித்த எல்லா உரிமையும் உண்டு!**
***அவருக்கு அவைகள் யாவையும் எடுத்துக்கொள்ளவும் அதிகாரம் உண்டு!***




# ஆயக்காரனின் "தாழ்மையான" ஜெபம்

**ABEL R. NAYAGAM**

எனக்குப் பிரியமான தேவனுடைய பிள்ளைகளே, உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த மாதமும் உங்களை இந்த இதழ் மூலமாக சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்த வருடத்தின் இறுதிக்கு நாம் வந்திருக்கிறோம். அப்படித்தானே? இன்னும் ஒரு மாதம் கழிந்தால் புது வருடம். சரி, இந்த வருடம் முழுவதும் நம்மை அரவணைத்துப் பாதுகாத்த தேவனுக்கு நாம் நன்றிகளை செலுத்த கடமைப்பட்டிருக் கிறோம். சரி, குழந்தைகளே மாதந் தோறும் நாம் கற்று வருகிற பாடங்களைப் போல இந்த மாதம் நாம் கற்றுக் கொள்ளப் போகிற பாடம் என்னவென்று பார்க்கலாமா?.

இயேசுவானவர் இந்த பூமியில் வாழ்ந்த போது அநேகருக்கு தேவ காரியங்களை கற்றுக் கொடுத்தார். சில சமயங்களில் அவர் உவமைகளைக் (Parable) கொண்டு ஈஸியாக கற்றுக்கொடுத்தார். ஜனங்களும் சுலபமாக கற்றுக் கொண்டனர். அப்படி அவர் சொன்ன உவமைகளில் ஒன்று தான் லூக்கா 18:9-14ல் பதிவாகியுள்ளது. இந்த உவமை ஜெபத்தை பற்றின ஒரு உவமை ஆகும்.

இந்த உவமையை அவர் இரண்டு காரணங்களுக்காக சொன்னார் (வசனம் 9).

1. சிலர் தங்களைத் தாங்களே நல்லவர்கள் என்று எண்ணிக் கொண்டிருந்தார்கள்.
2. மற்றவர்களை அவர்கள் அற்பமாக எண்ணிக் கொண்டிருந்தார்கள்.

சரி, என்ன நடந்தது? இரண்டு மனுஷர்கள் ஜெபம் செய்ய தேவாலயத்திற்கு போனார்கள். ஒருவன் பரிசேயன், மற்றொருவன் ஆயக்காரன். இருவரும் என்ன ஜெபம் செய்தார்கள்?

ஏன் இயேசு கிறிஸ்து ஆயக்காரனின் ஜெபத்தை மட்டும் அங்கீகரிக்கிறார்? இதற்கு விடை தான் இந்த மாதம் நாம் கற்றுக் கொள்ளப் போகும் பாடம்.

சிறுவர்களே, பரிசேயன் ஜெபித்தபோது, அவன் தனக்குத் தானே, மற்றெல்லாரைக் காட்டிலும் நான் நல்லவன் என்று நினைத்து ஜெபத்தை ஏறெடுத்தான். அந்த ஜெபத்தின் மூலம் தேவனுக்கு தான் எவ்வளவு நல்லவன் என்றும் மற்றவர்களும் அவனைப் போலவே ஜெபிக்க வந்த ஆயக்காரனும் தன்னைப் போல நல்லவர்கள் இல்லை எனவும் தெரியப்படுத்த மட்டும் அவன் குறியாயிருந்தான். அதினாலே அவன் மிகவும் உயர்ந்தவன் என்று பெருமைப்பட்டுக் கொண்டான்.

ஆனால், ஆயக்காரனோ, தேவனை நோக்கி பார்ப்பதற்குக் கூட தனக்கு தகுதியில்லை என்று நினைத்து, தேவனே, பாவியாகிய என் மேல் கிருபையாயிரும் என்று ஜெபித்தான். இங்கே ஆயக்காரன், பரிசேயனைப் போல் தன்னை மிகவும் நல்லவன் என்றும், பிறரைக் காட்டிலும் நான் உயர்ந்தவன் என்ன பெருமையும் இல்லாமல், தன்னைத் தாழ்த்தி ஜெபம் செய்தான்.

சரி, யாருடைய ஜெபம் தேவனாலே அங்கீகரிக்கப்பட்டது? ஆம், ஆயக்காரனின் ஜெபம் தான் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஏன்? வ-14ல் இயேசுவானவர் பதில் தருகிறார். ஏனெனில் தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப் படுவான், தன்னைத் தாழ்த்து கிறவன் உயர்த்தப்படுவான்.

எனவே நாம் ஜெபிக்கும் போது தாழ்மையாக ஜெபிக்க வேண்டும். ஏனென்றால், "பெருமை உள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார்" என்று வேதம் நமக்கு கூறுகிறது. யாக். 4:10ல் "கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்" என்று வாசிக்கி றோம். எனவே, நீங்கள் அடுத்த முறை ஜெபிக்கும்போது ஆயக்கார னைப் போல் தாழ்மையாக ஜெபம் செய்யுங்கள். அப்பொழுது தேவன் உங்களை உயர்த்துவார். சரியா?

தேவன் உங்களை உயர்த்து வாராக!

## விக்கிரகங்களும், தேவனுடைய வல்லமையும்

- ✧ விக்கிரகங்கள் மனிதனால் உண்டாக்கப்படுகின்றன. *ஆனால், மனிதர்களை உண்டாக்கினவரோ தேவன்.*
- ✧ விக்கிரகங்களை மனிதர்கள் தூக்கிச் செல்ல வேண்டியதாயிருக்கிறது. *ஆனால், தேவன் எல்லா இடங்களிலும் இருக்கிறார்.*
- ✧ விக்கிரகங்கள் முறிக்கப்பட்டு, வடிவமைக்கப்படுகிற மரத்தால் உண்டாக்கப் படுகின்றன. *அந்த மரங்களை உண்டாக்கினவரோ தேவன்.*
- ✧ விக்கிரகங்கள் மதிப்பிற்காகப் பொன்னினாலும், வெள்ளியினாலும் மூடப்படுகின்றன. *ஆனால், பொன்னையும், வெள்ளியையும் உருவாக்கினவரோ தேவன்.*
- ✧ விக்கிரகங்கள் ஒரு நாள் அழிக்கப்பட்டு விடும்; *ஆனால், தேவனோ அழியாதவர்*
- ✧ விக்கிரகங்களால் இயற்கையில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது. *ஆனால், தேவனால் இந்த உலகத்தை உலுக்குவது உட்பட எல்லாவற்றையும் செய்யமுடியும்.*

# நிழலும், நிஜமும்

*(The Shadow and the Reality)*

## Bro. ஜே.ஆ. ஜேம்ஸ் ராஜ்குமார்

அன்பானவர்களே!

சென்ற மாதம் மத். 5-ம் அதிகாரத்தில் கிறிஸ்துவின் போதனையை பார்த்தோம். அதன் தொடர்ச்சியாக இந்த மாதத்தில் கவனிப்போம்! இயேசுவானவர் மத்தேயு 5:27லிருந்து மனிதனுடைய வாழ்க்கைக்கும் சமூக ஒழுங்கிற்கும் குடும்ப ஒற்றுமைக்கும் பங்கம் வரக்கூடாது என்பதற்காக தேவன் பழைய ஏற்பாட்டு மக்களுக்குக் கொடுத்திருந்த "விபச்சாரஞ் செய்யாதிருப்பாயாக" என்கிற சட்டத்தை இன்னும் முன்னேற்றப்படுத்தி, மத்தேயு 5:28-ல் "ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபச்சாரஞ் செய்தாயிற்று" என்றார். நாம் ஏற்கனவே, கொலை செய்யாதிருப்பாயாக என்கிற சட்டம் செயலை மாத்திரமே கட்டுப்படுத்தியது என்பதைப் போலவே "விபச்சாரஞ் செய்யாதிருப்பாயாக" என்கிற பழைய ஏற்பாட்டின் 10 கற்பனைகளில் 7வது சட்டமும் அவர்களின் செயலை மாத்திரம் கட்டுப்படுத்தியது எனலாம். ஆனால், ஆண்டவராகிய இயேசுவானவர் தம்முடைய சொல்லாக, ("நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்") நம்முடைய இருதயத்தின் யோசனையை மனதின் எண்ணத்தைக் கட்டுப்படுத்துகிற இச்சையை எடுத்துப் போட வேண்டும் என்கிற கட்டளையைக் கொடுத்திருக்கிறார். இது ஆண்களுக்காக சொல்லப்பட்டதைப் போல இருந்தாலும் இந்த சட்டங்கள் ஆண், பெண் இரு பாலரையும் கட்டுப்படுத்தும். "ஒரு ஆணை இச்சையோடு பார்க்கிற எவளும் தன் இருதயத்தில் அவனோடே விபச்சாரஞ் செய்தாயிற்று" என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

எது விபச்சாரம் என்றால் ஓர் ஆண் ஒன்றுக்கும் மேற்பட்ட பெண்கள் அல்லது ஒரு பெண் ஒன்றுக்கும் மேற்பட்ட ஆண்கள் என்று உறவை வைத்துக் கொள்வது விபச்சாரம் ஆகும். ஆனால், புதிய ஏற்பாட்டின்படி ஒரு ஆண் ஒரு பெண்ணை மட்டும் தன் துணையாக யோசிக்க வேண்டும். அப்படியில்லாமல் ஒன்றுக்கு மேற்பட்ட அல்லது இரண்டாவது பெண்ணை தன் துணையாக யோசித்தாலே அது பாவம் மத். 5:28-ஐ மீறின செயலாகும். அப்படியே பெண்ணுக்கும் இது பொருந்தும்.

| பழைய ஏற்பாடு, நிழல் | புதிய ஏற்பாடு, நிஜம் |
|---|---|
| விபச்சாரஞ் செய்யாதிருப்பாயாக (மத். 5:27) | ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபச்சாரஞ் செய்தாயிற்று (மத். 5:28) |

அதைத் தொடர்ந்து மத். 5:29,30 ஆகிய வசனங்களில் உன் கண் உனக்கு இடறலுண்டாக்கினால், உன் கை உனக்கு இடறலுண்டாக்கினால் என்று ஆண்டவர் சொல்லுகிறார். கண்களால் ஒரு ஆண் வெவ்வேறு பெண் களைப் பார்த்து இவள் எனக்கு துணையாக இருந்தால் என்று யோசித்தால் அதே போல ஒரு பெண் வெவ்வேறு ஆண்களைப் பார்த்து இவர் என் துணை யாக இருந்தால் என்று யோசித்தால் அல்லது இச்சித்தால் யாருக்கும் தெரியாமலேயே ஒரு செயல் நடைபெறாமலேயே இருதயத்தில் விபச்சாரம் செய்தாயிற்று. இதன்படி பார்க்கப் போனால் இன்றைக்கு உலகத்தில் எத்தனை இலட்சம் அல்லது கோடி விபச்சாரங்கள் இருதயத்தில் நடக்கிறது. இந்த உலகம் எவ்வளவு பாவத்தை தினமும் தேவனுக்கு விரோதமாக உற்பத்தி செய்து கொண்டிருக்கிறது. ஆனாலும், ஏன் தேவன் இந்த உலகத்தை அழிக்கவில்லை? நமக்கே தெரியும் எல்லாரும் மனந்திரும்ப வேண்டும் என்பதற்காக. ஆகையினால், பரிசுத்த ஆவியானவர் சொல்லு கிறது என்னவென்றால், ஒருவன் கிறிஸ்துவினுடையவனாக வேண்டு மென்றால் "தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்" (கலா. 5:24). இந்த வசனத்தில் அவர் ஆசையைப் பற்றி சொல்லும்போது மாம்சத்தையும் அதின் ஆசையையும் என்று சொல்லுகிறார். ஏனென்றால், ஆசையிலே நல்ல ஆசைகளும் இருக்கிறது. ஆனால், நல்ல இச்சை இருக்க முடியாது. ஆகையால் ஆண்டவர் சொல்லுகிறார், நீ கண்ணால் பார்ப்பதால்தானே அது இருதயத்தில் எண்ணமாகி இச்சையாகிறது. ஆகையால், நீ கண்ணுடைய வனாய் நரகத்திற்கு போவதைப் பார்க்கிலும் ஒரு கண்ணில்லாதவனாய் பரலோகத்திற்கு போவது நல்லது என்கிறார். கண் பார்க்கிறது, இருதயம் இச்சிக்கிறது, கைகள் செயல்படுத்துகிறது. இதில் ஆண்டவருடைய சட்டம் தவறாகப் பார்ப்பதை கட்டுப்படுத்துகிறது. ஏனன்றால், அந்த ஆவிக்குரிய சட்டம் ஒருவனுடைய இருதயத்திலிருந்து இச்சையை எடுத்துப்போட்டு விட்டது. அந்த இச்சை (தவறான பேராசை) சிலுவையிலறையப்பட்டு மரித்து விட்டது. அது மீண்டும் உயிரோடு எழாதபடிக்கு தண்ணீரினால் (ஞானஸ் நானத்தில்) அடக்கம் செய்யப்பட்டு விட்டது. அப்படிப்பட்ட இச்சை மீண்டும் உயிர்பெற்றால் அவன் கிறிஸ்தவனல்ல. ஒருவன் தகுதியுள்ள கிறிஸ்தவனா யிருப்பதற்கு அவன் கீழ்படியும்போது, தேவன் அவன் இருதயத்திலிருந்து இச்சையை வெட்டி எடுத்துப்போடும், ஆவிக்குரிய விருத்தச்சேதனம் செய்வதற்கு அவன் இடங் கொடுத்திருக்க வேண்டும் (கொலோ. 2:11). "மாம்சத்துக்குரிய பாவ சரீரத்தைக் (தேவன்) களைந்து விட்டதினால்," ஒருவன் புதிய மனிதனாக கிறிஸ்தவனாக இருக்க முடியும். விபச்சாரம் இல்லாதவனாயிருக்க முடியும்.

ஆண்டவர், எந்த அளவிற்கு குடும்பம் என்கிற அமைப்பின்மேல் கவனமுள்ளவராயிருக்கிறார் என்பதை அதைத் தொடர்ந்து வரும் வசனங்கள் நமக்கு உணர்த்துகிறது. ஏனென்றால், விபச்சாரத்தை பற்றி சொன்னவர் உடனே (விவாகரத்தைப்) மனைவியை தள்ளி விடுவதைப் பற்றி சொல்லுகிறார். இந்த சட்டம் 10 கற்பனைகளில் ஒன்று அல்ல, ஆனாலும், விபச்சாரம் செய்யாதிருப்பாயாக என்கிற சட்டத்திற்கு இது மிகவும் நெருக்கமான ஒரு சட்டமாயிருந்தது. தன் மனைவியை தள்ளுவிடுகிற எவனும் தள்ளுதற் சீட்டை அவளுக்குக் கொடுக்கக்கடவன் என்கிற இந்த சட்டம் தேவனுடைய சித்தத்திற்கு விரோதமான சட்டமாயிருக்கிறது என்று

ஆண்டவர் தெளிவுபடுத்துகிறார். பரிசேயர் இயேசுவானவரிடம், "அப்படியானால் தள்ளுதற் சீட்டைக் கொடுத்து, அவளைத் தள்ளிவிடலா மென்று மோசே ஏன் கட்டளை யிட்டார் என்றார்கள். அதற்கு அவர்; உங்கள் மனைவிகளைத் தள்ளிவிடலா மென்று உங்கள் இருதயக் கடினத்தினி மித்தம் உங்களுக்கு இடங் கொடுத்தார். ஆதி முதலாய் அப்படி இருக்க வில்லை" என்றார் (மத். 19:7,8). யூதர்கள் தங்கள் மனைவிகளை ஒரு பொருளைப் போல எண்ணினார்கள். ஒரு வாகனம் அல்லது பொருள் பழுதடைந்தால் அலுலது பழசாகிப் போனால் அந்த பொருளை தவிர்த்து விட்டு புதிய வாகனம் அல்லது பொருளை வாங்கிக் கொள்வதைப் போல பெண்களை எண்ணினார்கள் என்பதைப் போல காணப்படுகிறது. ஆகையால், அவர்கள் எந்தவிதமான காரணம் இல்லாமல் புதிய பெண்ணின் மேல் கொண்ட இச்சையை நிறைவேற்றுவதற்காக திருமணம் செய்திருந்த மனைவியை சுலபமாக ஒரு சீட்டு எழுதிக் கொடுத்து தள்ளிவிட்டார்கள். எனவே, ஆண்டவர் வேசித்தன முகாந்திரத்தினா லொழிய தன் மனைவியை தள்ளி விடுவது பாவம் செய்வதற்கு ஏதவானது என்று கடிந்து கொள்ளுகிறார்.

பெண்கள் ஆண்களைப் போல தேவனுடைய சாயலில் படைக்கப் பட்டிருக்கிறார்கள் என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை என்பதாக தோன்றுகிறது. ஏன் இன்றைக்கும் கூட ஆண்கள் மட்டுமே தேவ சாயலில் படைக்கப்பட்டிருக்கிறார்கள். சகோதரிகள் அதாவது, பெண்கள் தேவ சாயலில் படைக்கப்படவில்லை என்று விவாதிக்கிறார்கள். இதைக் குறித்து விவரிக்க இப்பொழுது சமயமில்லை. ஆனால், ஒரு கருத்தை கவனிக்க வேண்டும். "அவர்களுக்கும் அவர் பிரதியுத்தமாக; ஆதியிலே மனுஷரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும்.... இப்படி இருக்கிறபடியினால், அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்; ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடான் என்றார்". (மத். 19:4,6) அவர்கள் எப்படி ஒரே மாம்ச மாயிருக்கிறார்கள்? என்கிற ஒரு கேள்வியைக் கேட்டால், அதற்கு தேவன் தன் படைப்பைக் கொண்டே பதில் சொல்லியிருப்பது நமக்கு விளங்கும்.

தேவன் மனிதரைப் படைக்கும் போது, தேவனாகிய கர்த்தர் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்; (ஆதி. 2:7). ஆதாமை அதாவது அவன் சரீரத்தை மண்ணினாலே உருவாக்கி அந்த மண்ணான சரீரத்திற்குள் வாழும்படியாக தன்னுடைய சாயலில் உள்ளான மனிதரை (ஆவியை) உருவாக்கினார். ஆனால், அவர் ஏவாளை உருவாக்கும் போது, ஆதாமைப் படைத்த போது செய்ததைப் போல மீண்டும் மண்ணினாலே ஏவாளை அதாவது அவளுடைய சரீரத்தை உருவாக்கவில்லை. அப்படி தனித்தனியே மண்ணினாலே சரீரங்களை உருவாக்கி ஆதாமையும், ஏவாளையும் படைத்திருந்தால் அவர்களை ஒரே சரீரமாகச் சொல்ல முடியாது. ஆகையால், தேவன் ஆதாமினுடைய விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அதை மனுஷியாக உருவாக்கி அந்த மனுஷியை ஆதாமுக்கு துணையாக உண்டாக்கினார். இதிலே தேவனுடைய ஞானம் இருக்கிறது. முதலாவது, அவர் ஆதாமிடத்திலிருந்து ஒரு விலா எலும்பை மட்டுமே எடுத்தார். இரண்டு, மூன்று எலும்புகள் எடுக்கவில்லை. இதிலிருந்து ஒருவனுக்கு ஒருத்தி தான் என்பதை நிரூபித்தார். ஒரு பெண்ணை

உண்டாக்கினார். ஆதாமுக்காக உருவாக்கப்பட்ட சரீரத்திலிருந்தே ஏவாளும் உண்டாக்கப்பட்டபடியால் அவர்கள் இருவரும் ஒரே சரீரமாயிருக்கிறார்கள். வெவ்வேறு சரீரங்கள் அல்ல என்பதை தேவன் நிரூபித்தார்; (ஆதி. 2:18,21-24). ஆதாமும் கூட இவள் என் எலும்பில் எலும்பும் என் மாம்சத்தில் மாம்சமாயிருக்கிறார் என்றான் என்று பார்க்கிறோம்.

இந்த முதல் புதிய குடும்பத்திற்கு, இவர்கள் கணவன் மனைவி உறவின் ஆரம்பத்திற்கு தேவன் மட்டுமே சாட்சியாயிருந்தார். வேறு மனிதர்கள் யாரும் சாட்சியில்லை. அவர்கள் இணைப்பை (திருமணத்தை) தேவன் பதிவு செய்தார் (பதிவு அலுவலகம் அப்போது இல்லை) (மல்கியா 2:14).

இதையெல்லாம் யூதர்கள் அறிந்திருந்ததாக தெரியவில்லை. அவர்கள் தங்களை தேவனுடைய பிள்ளைகள் என்று சொல்லிக் கொண்டாலும் குடும்ப அமைப்பிற்காக தேவன் வகுத்த படைப்பின் நியாயத் தைக் கூட மதிக்காமல் தங்கள் இஷ்டம் போல் மனைவியை தள்ளி விட்டு சுலபமாக வேறொரு பெண்ணைத் திருமணம் செய்து இப்படி தங்கள் வாழ்க்கையில் பல மனைவிகளை திருமணம் செய்ததுமட்டுமல்லாமல் ஒரே நேரத்தில் சில அல்லது பல மனைவிகளை உடையவர்களாயிருந்தார்கள். இதைப் பெருமையாகவும் எண்ணிக் கொண்டார்கள். ஒருவனுக்கு ஒருத்தி என்பது கிறிஸ்தவர்களுக்கு மட்டுமல்ல உலகத்திலுள்ள அனைவருக்கும் பொருந்தும்படியான சட்டமாயிருக்கிறது. ஏனென்றால், அவர்களையும் பரலோகத்தின் தேவன் தான் படைத்தார். அவர்களை வேறு கடவுள்கள் யாரும் படைக்கவில்லை. தள்ளுதற்சீட்டு கொடுத்து அனுப்பிவிடப்பட்ட பெண்களும் வேறு ஆண்களை திருமணம் செய்து கொண்டார்கள் என்பதாகக் காணப்படுகிறது. ஏனென்றால், இயேசுவானவர் தள்ளிவிடப் பட்டவளை விவாகம் செய்கிறவனும் விபச்சாரஞ் செய்கிறவனாயிருப் பான் என்கிறார். இதனால் அந்த சமூகம் சீர்கெட்டுப் போயிருந்தது. எரேமியா சொல்லும் போது அவர்கள் என் உடன்படிக்கையின் சட்டங்களை மீறி அதை அவமாக்கிப் போட்டார்களே என்கிறார் (எரே. 31:32). உடன் படிக்கையின் சட்டங்களே அவமாகிப் போகிற அளவிற்கு அதாவது பிரயோஜனமற்றுப் போகிற அளவிற்கு அவர்கள் அதை மீறினார்கள் என்பதாக எண்ணத் தோன்றுகிறது.

| | |
|---|---|
| தன் மனைவியைத் தள்ளி விடு கிறவன் தள்ளுதற் சீட்டை அவளுக்குக் கொடுக்கக்கடவன். (மத். 5:31) | வேசித்தன முகாந்திரத்தினா லொழிய தன் மனைவியை தள்ளி விடக்கூடாது. (மத். 5:32) |

ஆனால், புதிய ஏற்பாடு மனிதன் செய்கிற தவறுக்காக அவமாகப் போகாது. ஏனென்றால், கிறிஸ்தவானவர் தம் நீதியுள்ள இரத்தத்தினால் அதை பரிபூரணப்படுத்தினாரே. வேசித்தனமுகாந்திரத்தினால் தள்ளலாம் என்று சொல்லப்பட்டாலும் அது நிரூபிக்கப்பட வேண்டும். அதை ஒரு காரண கருவியாகப் பயன்படுத்தி மனைவியை தள்ளி விடக்கூடாது என்பது அதில் மறைமுகமான சட்டமாயிருக்கிறது. இப்படிப்பட்ட சம்பவங்கள் விபச்சாரம் வேசித்தனம் மனைவியைத் தள்ளிவிடுவது கிறிஸ்தவர்களுக்குள்ளே இருக்கக்கூடாது என்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. இந்த தேவனுக்கு விரோதமான காரியங்களை யோசிக்கிறவர்கள் கூட தேவனுடைய

பிள்ளைகளாயிருக்க முடியாது. அவர்கள் தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிக்க முடியாது என்பதை தேவன் கடுமையாகச் சொல்லியிருக்கிறார்.

ஏனென்றால், மனித குலத்திற்கு குடும்ப அன்பு, பாசம் ஒருவரை யொருவர் சார்ந்து கொள்வது. புரிந்து கொள்வது, விட்டுக் கொடுப்பது, சகித்துக் கொள்வது, பொறுத்துக் கொள்வது போன்றவை மிகவும் அவசிய மாயிருக்கிறது. இப்படிப்பட்ட ஆவிக்குரிய கனிகள் ஒவ்வொரு கணவன் மனைவியினிடத்திலும் இருக்க வேண்டும் என்று கிறிஸ்துவானவர் எதிர்ப்பார்க்கிறார். குடும்பத் தலைவரை கிறிஸ்துவுக்கும் மனைவியை சபைக்கும் ஒப்பிட்டு பேசுகிறார் என்றால் குடும்பம் எவ்வளவு தியாகம், அன்பு, நீதி, பரிசுத்தமாயிருக்க தேவன் எண்ணுகிறார் என்பது நமக்கு விளங்கும். இப்படிப்பட்ட குடும்பங்களாலான சபை உண்மையிலேயே தேவன் வாசமாயிருக்கிற அல்லது வாழுகிற இடமாயிருக்கும். பரலோகத்தின் சாயல் அங்கே நிலவியிருக்கும்.

கணவன், மனைவி இவர்கள் இருவருக்குள்ளே வேறொருவர் வரக்கூடாது என்பதை வலியுறுத்தும்படி எபிரெய ஆசிரியர், எபிரெயர் 13:4-ல் விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாக மஞ்சம் அசுசிப்படாத தாயுமிருப்பதாக என்கிறார். விவாகமஞ்சம் அசுசிபடாதிருப்பதாக என்பது கணவன் மனைவி இவ்விருவருக்கு இடையே யாரும் வரக்கூடாது என்பதாகும். அதாவது, மூன்றாவது நபருக்கு அங்கு வேலையில்லை அல்லது வாய்ப்பு இல்லை. அவர்கள் மரணபரியந்தம் இந்த நிலையைக் கடைபிடிக்க வேண்டும். மரணம் தான் அவர்களைப் பிரிக்க வேண்டுமே தவிர வேறெந்த ஒன்றும் அவர்களைப் பிரிக்கக் கூடாது என்பதாக "தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன்" என்று இயேசுவானவர் ஆணித்தரமாக கூறுகிறார்.

ஒரு கட்டுக்கோப்பான குடும்ப அமைப்பை தேவன் ஏன் விரும்பு கிறார்? ஏனென்றால், தகப்பனும், தாயும் அடிக்கடி பிரிந்து போனால் அந்த பிள்ளைகளின் நிலைமை என்னவாகும். பிள்ளைகள் கர்த்தருடைய சுதந்திரம் (சங். 127:4). அவர்களைப் பெற்றோர்கள் தேவ பக்தியுள்ள சந்ததி களாக உருவாக்க வேண்டும் (மல்கியா 2:15). இந்த தேவனுடைய நோக்கத் தைத் தள்ளிவிட்டு தங்களுடைய இருதயத்தின் இச்சைகளை நிறைவேற்ற ஆணும் பெண்ணும் முற்பட்டால் அந்த குடும்பமும், பிள்ளைகளும் தேவனுடைய வழியை அறியாதவர்களாகவும், பாதுகாப்பு இல்லாதவர் களாகவும், பெற்றோர்களால் போதிக்கப்படாதவர்களாகவும், பெற்றோர் களையும், தேவனையும் மதிக்காதவர்களாகவும், தேவனுக்கு விரோதமான வாழ்க்கை வாழத் தொடங்குவார்கள். கடைசியில் அந்த முழு தேசமே சாபத்திற்குட்பட்டு தேவனால் அழிக்கப்படும் அபாயத்திற்கு தள்ளப்படும். இப்படித்தான் இஸ்ரவேலர்களும் அவர்களுடைய சந்ததியார்களும் ஒரு தேசமாக இராதபடிக்கு அழிக்கப்பட்டார்கள். தேவன் விக்கிரக ஆராதனை யை எதிர்க்கிற அளவிற்கு விபச்சாரம் வேசித்தனத்தை எதிர்க்கிறார், வெறுக்கிறார். ஏனென்றால், விக்கிரக ஆராதனை விசுவாசம் நம்பிக்கை யைக் கெடுக்கிறது. விபச்சாரம் வேசித்தனம் தெய்வீக குடும்ப அமைப்பை யையும், தேவனுடைய திட்டத்தையும் கெடுக்கிறது. ஆகவே, நாம் இவை களுக்கு விலகி நம்மைக் காத்துக் கொள்வோமாக! தொடர்ந்து அடுத்த மாதத்தில் ஆராய்வோம்.

(தொடரும்)





# பாடம்-24. ஆயிர வருட அரசாட்சி

K. பாஸ்கர்

அந்திக் கிறிஸ்து பற்றி மனிதக் கற்பனைகளும், யூகங்களும் எப்படி அதிகமாக மக்கள் மத்தியில் இருக்கிறதோ அதே போல ஆயிர வருட அரசாட்சியைக் குறித்தும் மனிதக் கற்பனைகளும், யூகங்களும் அதிகமாக இருக்கிறது. எப்படி என்றால், ஆயிர வருட அரசாட்சி இன்னும் வரவில்லை என்றும் ஆண்டவர் இயேசு கிறிஸ்து பூமிக்கு மீண்டும் வருவார் அப்பொழுது ஆயிர வருட அரசாட்சி இருக்கும், அதன் பின்பு அவரது இரண்டாம் வருகை இருக்கும், அப்பொழுது நியாயத்தீர்ப்பு இருக்கும் என்று அநேகர் நினைக்கிறார்கள்! இன்னும் சிலர் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குப் பின்பு ஆயிர வருட அரசாட்சி இருக்கும் என்று நினைக்கிறார்கள்.

அன்பான வாசகர்களே, நாம் மனிதக் கற்பனைகளுக்கும், யூகங்களுக்கும் விலகி வேத வசனத்தில் சொல்லப்படும் ஆயிர வருட அரசாட்சியைக் குறித்து தெளிவாகப் படித்து வசன ரீதியான கிறிஸ்துவின் சபைக்குத் திரும்புவோமாக!

## I தேவனுடைய அரசாட்சி

பரலோகத்தின் தேவன் முன்னொரு காலத்தில் இஸ்ரவேல் ஜனங்களைத் தமக்குச் சொந்த ஜனமாக ஏற்படுத்திக் கொண்டார் என்பதை நாம் அனைவரும் வேதத்திலிருந்து அறிந்திருக்கிறோம். அவர்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்துப் பாலும், தேனும் ஓடுகிற தேசமான கானான் தேசத்தில் குடியிருக்கும்படி செய்தார். மோசே, யோசுவா அவர்களை வழிநடத்தி வந்தனர். அதன்பின்பு நியாயாதிபதிகள் தேவனுடைய் ஆலோசனைப்படி நியாயம் விசாரித்தனர். கடைசி நியாயாதிபதியாகிய சாமுவேல் தீர்க்கதரிசி இஸ்ரவேலர்களை நியாயம் விசாரித்த காலத்தில் அவர் முதிர்வயதாகி தம்முடைய குமாரர்களை நியாயம் விசாரிக்க அவர்களை நியாயாதிபதிகளாக நியமித்தார். ஆனால், அவர்கள் தேவனுடைய வழியில் நடவாமல் பொருளாசைக்குச் சாய்ந்து பரிதானம் வாங்கி, நியாயத்தைப் புரட்டினார்கள். ஆகையால், சகல ஜாதிகளுக்குள்ளும் இருக்கிறபடி எங்களை நியாயம் விசாரிக்கிறதற்கு ஒரு ராஜாவை ஏற்படுத்த வேண்டும் என்று இஸ்ரவேலர்கள் சாமுவேல் தீர்க்கதரிசியிடம் முறையிட்டனர். சாமுவேலுக்கு இந்த வார்த்தை தகாததாய்க் காணப்பட்டது. ஒருவேளை நியாயாதிபதி வேண்டுமென்று கேட்டிருந்தால் சாமுவேலுக்கு வருத்தமாக இருந்திருக்காது என்று நான் கருதுகிறேன். அவர்கள் ராஜாவை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டதால் அவர் வருத்தப்பட்டு கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினார். அப்பொழுது கர்த்தர் சாமுவேலை நோக்கி ஜனங்கள் உன்னிடத்தில் சொல்வதெல்லாவற்றிலும் அவர்கள் சொல்லைக் கேள், அவர்கள் உன்னைத் தள்ளவில்லை. நான் அவர்களை ஆளாதபடிக்கு

என்னைத்தான் தள்ளினார்கள். நான் அவர்களை எகிப்திலிருந்து புறப்படப் பண்ணின நாள் முதல் இந்நாள் மட்டும் அவர்கள் என்னை விட்டு வேறே தேவர்களைச் சேவித்து வந்த தங்கள் எல்லாச் செய்கைகளின்படியும் செய்தது போல அவர்கள் உனக்கும் செய்கிறார்கள் இப்போதும் அவர்கள் சொல்லைக் கேள். ஆனாலும், உன் அபிப்பிராயத்தைக் காட்டும்படி அவர் களை ஆளும் ராஜாவின் காரியம் இன்னது என்று அவர்களுக்குத் திட சாட்சி யாய்த் தெரியப்படுத்துவேன் என்றார் (1 சாமு. 8:5-9) அதாவது, இஸ்ரவேலர் களைத் தேவன் பரலோகத்திலிருந்து தம்முடைய சிங்காசனத்தில் வீற்றிருந்து ஆட்சி செய்தார். அவருடைய ஆவிக்குரிய அரசாட்சியை அவர்கள் உணராமல் அதைப் புறக்கணித்து மனிதனுடைய அரசாட்சியை விரும்பினார்கள் அந்த மனிதனுடைய ஆட்சியின் முடிவைக் குறித்து அவர் களுக்குக் காண்பிப்பேன் என்று தேவன் சாமுவேலிடத்தில் கூறினார்.

இஸ்ரவேலர்களின் விருப்பத்தின்படி சாமுவேல் தீர்க்கதரிசி சவுலை அவர்களுக்கு முதல் ராஜாவாக ஏற்படுத்தினார். ஆனால், சவுல் தேவனுக் குக் கீழ்ப்படியாமல் போனார். ஆகவே, சவுலை ராஜாவாக இராதபடி புறக் கணித்துத் தள்ளினார் (1 சாமு. 15:22,23) அதன்பின்பு தாவீதை ராஜாவாக ஏற்படுத்தினார். தாவீது தேவனுக்குக் கீழ்ப்படிந்து அவருடைய தயவை பெற்றுக்கொண்டார். (அப். 7:45,46) ஆதலால், தாவீதின் சிங்காசனத்தை தம்முடைய சிங்காசனமாக எண்ணினார். அதன்பின்பு சாலொமோன் அரசாட்சி செய்தார். அவரும் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் அந்நியப் பெண் களைத் திருமணம் செய்துகொண்டு பின்வாங்கிப் போனார் (1 இராஜா 11:1-4) அதன் பின்பு இஸ்ரவேல் ராஜ்யம் பிளவுபட்டது. இஸ்ரவேல் ராஜ்யம் என்றும், யூதா ராஜ்யம் என்றும் பிரிந்தது. இந்த நாட்களில் ஏசாயா, எரேமியா போன்ற தீர்க்கதரிசிகள் எழும்பினார்கள். பிரிந்த இராஜ்யங்கள் சிறைப்பட்டு போகும் என்றும், தேவன் கடைசி நாட்களில் கர்த்தருடைய ராஜ்யத்தை, கர்த்தருடைய ஆலயத்தை ஏற்படுத்துவார், கிறிஸ்து வந்து அதைச் செய்வார் என்றும் தீர்க்கதரிசனமாக உரைத்தனர் (ஏசா. 9:6-9).

தீர்க்கதரிசிகள் உரைத்தபடி இஸ்ரவேல் அசீரியர்களால் சிறைப் பட்டுப் போனார்கள் (2 இராஜா 15:29) அதன் பின்பு யூதா இராஜ்யமும் பாபிலோனுக்குச் சிறையாக நேபுகாத்நேச்சாரால் கொண்டு செல்லப்பட்டது (2 இராஜா 24:11-14) இவ்விதமாக மனிதர்களின் அரசாட்சி நிலைத்திராமல் முடிவுக்கு வந்தது. மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு. அதன் முடிவு மரணம் (நீதி. 16:25) தேவன் இவ்விதமாக தம்முடைய சித்தத்தைக் காண்பித்து தம்முடைய திட்டத்தை நிறைவேற்ற கிறிஸ்துவை அனுப்பி அவரது ஆவிக்குரிய அரசாட்சியைக் கொண்டு வரத் தீர்மானித்தார் (அப். 13:17:23).

## II ஆயிர வருட அரசாட்சி எப்பொழுது வரும்?

காலம் நிறைவேறின பொழுது பரலோகத்தின் தேவன் தமது குமாரன் இயேசு கிறிஸ்துவை இந்த உலகத்திற்குக் கொண்டு வரக் கன்னி மரியாளைத் தெரிந்து கொண்டார். *அவளிடத்தில் தேவ தூதன் தோன்றி இதோ நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய் அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக அவர் பெரியவராயிருப்பார். உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார் கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின்*

*குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார் அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது என்றான்.* (லூக். 1:31-33) இது மனிதனுடைய ஆட்சியைப் போல இல்லை. இதை பரலோகத்தின் தேவன் தமது குமாரன் மூலமாய் என்றென்றும் அரசாளுவார். அவருடைய அரசாட்சிக்கு முடிவில்லை என்று தேவதூதன் கூறினார். இந்த வார்த்தை கன்னி மரியாளுக்கு மகிழ்ச்சியை அளித்தது. இதோ நான் ஆண்டவருக்கு அடிமை என்றாள் அதன்படி அவள் பரிசுத்த ஆவியினால் கர்ப்பவதியானாள் (லூக். 1:34-38). இயேசு கிறிஸ்து பரிசுத்தமுள்ளவராய் இந்தப் பாவ உலகில் பிறந்தார். அவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவ கிருபையிலும், மனுஷர் தயவிலும் வளர்ந்தார் (லூக். 2:52). அவர் முப்பதாவது வயதில் ஞானஸ்நானம் பெற்று தேவனுடைய நீதியை நிறைவேற்றினார். அதன்படி உடனே மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபத்தில் இருக்கிறது என்று பிரசங்கிக்கத் துவங்கினார் (மத். 4:17) அவர் செல்லுமிடம் எங்கும், அவருடைய எல்லா உவமைகளிலும், எல்லா பிரசங்கங்களிலும் மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபத்தில் இருக்கிறது என்றே போதித்தார். பரலோக ராஜ்யமும், தேவனுடைய ராஜ்யமும் ஒன்றுதான். அந்த தேவனுடைய ராஜ்யம் கிறிஸ்துவின் ராஜ்யமாக, கிறிஸ்துவின் சபையாக இருக்கிறது (எபே. 5:5).

தேவனுடைய ராஜ்யம் வருவதைக் குறித்து கிறிஸ்து தமது சீஷர்களிடத்தில் கூறும்பொழுது இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணுமுன் மரணத்தை ருசிபார்ப்பதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் (மாற்கு 9:1). அதாவது, முதல் நூற்றாண்டில் அப்போஸ்தலருடைய நாட்களிலேயே ராஜ்யம் வரும் என்று இயேசு கிறிஸ்து கூறினார். மேலும், அதே சமயத்தில் இயேசு கிறிஸ்து தன்னுடைய சபையைக் கட்டுவேன் என்றார். ராஜ்யமும், சபையும் ஒன்று (மத். 16:18,19).

அவர் சொன்னபடி மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார். அது தாவீதின் சிங்காசனமாக, தேவனுடைய சிங்காசனமாக இருந்தது. இது குறித்து அப்போஸ்தலனாகிய பேதுரு பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டு பிரசங்கித்தார். இதை யூத மக்கள் கேட்டபொழுது இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றார்கள். பேதுரு அவர்களை நோக்கி நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். பேதுருவின் வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத்தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் (அப். 2:23-41) ராஜ்யமாகிய சபை திறக்கப்பட்டதால் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். இது ஆவிக்குரிய ராஜ்யம். இயேசு கிறிஸ்து பரலோகத்திலிருந்து தமது சபையாகிய ராஜ்யத்தை அரசாட்சி செய்கிறார். தேவ தூதர்களும், அதிகாரங்களும், வல்லமைகளும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது (1 பேதுரு 3:22) அவர் ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தராகவும் வீற்றிருக்கிறார் (1 தீமோ. 6:15,16; வெளி. 17:14) அவருடைய ராஜ்யம் சதாகாலங்களிலுமுள்ள ராஜ்யம்

(சங். 145:13) அவருடைய அரசாட்சிக்கு முடிவிராது (லூக். 1:31-33). இது ஆயிரம் வருடம் அதாவது, நீண்ட காலமாக அரசாட்சி செய்கின்றார் (வெளி. 20:4) எனவே, ஆயிர வருட அரசாட்சி எப்பொழுது வரும் என்று இனிக் காத்திருக்காமல் உடனே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, மனந்திரும்பி, அறிக்கையிட்டு பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும். இயேசு கிறிஸ்து தமது இரண்டாம் வருகையில் தமது ஆட்சிப் பொறுப்பை பிதாவிடம் ஒப்படைக்கவிருக்கிறார் (1 கொரி. 15:24) அவருடைய வருகைக்குள் அவருடைய ராஜ்யமாகிய சபையில் இருக்கும் படியாக உங்கள் செயல்கள் மாறட்டும்.

## III வெளிப்படுத்தின விசேஷமும் ஆயிர வருட அரசாட்சியும்

ஆயிரம் வருடம் என்ற வார்த்தை வேதாகமத்திலேயே வெளிப்படுத்தின விசேஷம் 20 ஆம் அதிகாரத்தில் மட்டுமே உள்ளது. இந்த புத்தகம் உருவக நடையில் எழுதப்பட்டுள்ளது. இது தீர்க்கதரிசன புத்தகம். கடந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம் பற்றிய செய்திகளைக் கொண்டதாக இருக்கிறது. கடந்த காலத்தில் இயேசு கிறிஸ்து நம்மிடத்தில் அன்பு கூர்ந்து சிலுவையில் தமது இரத்தத்தைச் சிந்தினார் என்பது கடந்த காலச் செய்தியாக உள்ளது. (வெளி. 1:6) நிகழ் காலத்தில், அவர் நம்முடைய பாவங்களைக் கழுவித் தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியருமாக்கினார். அவர் இப்போது ராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தருமாயிருக்கிறார் என்பது நிகழ் காலச் செய்தியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது (வெளி. 1:6,17:4) அவர் வருகிறார் என்பதும், அவர் வந்து நியாயந்தீர்ப்பார் என்பதும் தேவனுக்கு உண்மையாக வாழ்ந்தவர்களுக்கு நித்திய ஜீவனைக் கொடுத்து ஆறுதல் கொடுப்பார் என்பதும் வருங்கால தீர்க்கதரிசனமாக உள்ளது (வெளி. 22:10-12) இப்படிப்பட்ட கருத்துகளோடு ஆயிர வருட அரசாட்சியைக் குறித்து படித்துப் பார்த்தால் பலவிதமான குழப்பமான உபதேசங்களுக்குத் தீர்வு கிடைக்கும்.

ஆயிர வருட அரசாட்சியைக் குறித்து வெளி 20ம் அதிகாரத்தின் வசனம் ஒன்றில், ஒரு தூதன் பாதாளத்தின் திறவுகோலையும், பெரிய சங்கிலியையும் தன் கையிலே பிடித்துக் கொண்டு வானத்திலிருந்திறங்கி வரக்கண்டேன் என்று தொடங்குகிறது. அதாவது, தேவனிடத்தில் அதிகாரம் பெற்ற ஒரு தூதன் தேவ வசனமாகிய சங்கிலியைப் பிடித்துக் கொண்டிருந்தான். சங்கிலி என்பது தேவனுடைய வசனம். அதினாலே பாவம் செய்த தூதர்களை அந்தகாரத்திலே தேவன் கட்டிப்போட்டார் (2 பேதுரு 2:4).

வசனம் இரண்டில் பிசாசென்றும், சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து ஆயிரம் வருஷமளவும் கட்டிப் போட்டான். அதாவது, சாத்தானின் அதிகாரங்கள் எல்லாவற்றையும் தேவனுடைய தூதன் சுவிசேஷத்தினால் கட்டிப்போட்டான். ஆயிரம் வருஷமளவும் அதாவது கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரையிலும் கட்டிப்போட்டான். ஏன் கட்டிப்போட்டான் என்று அதே வசனத்தில் கூறுகின்றது. அது ஜனங்களை மோசம் போக்காதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து அதின்மேல் முத்திரை போட்டான்.

சுவிசேஷத்தின் வல்லமையினால் சாத்தான் கட்டப்பட்டான், பாதாளத்திலே முத்திரை போடப்பட்டான். எனவே அசுத்த ஆவி கலாட்டா, பேய், பிசாசு ஓட்டுதல் எல்லாம் முறியடிக்கப்பட்டது.

இயேசு கிறிஸ்து பிசாசு என்ற பலவானைக் கட்டிப்போட்டார் (மத். 12:29). தம்முடைய மரணத்தினால் சாத்தானின் தலையை நசுக்கினார் (ஆதி. 3:15) மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனை இயேசு தமது மரணத்தினாலே அழித்தார் (எபி. 2:14) சாத்தானின் அதிகாரங்கள் எல்லாம் அழித்து சிலுவையிலே வெற்றி அடைந்தார் (1 யோவான் 3:8; கொலோ. 2:15) வசனம் மூன்றில் "அதன்பின்பு" என்பது சாத்தான் கட்டிப் போடப்பட்ட பின்பு கொஞ்சக்காலம் விடுதலையாக வேண்டும். இதன் பொருள் முதல் நூற்றாண்டு வரைக்கும் சாத்தான் விடுதலைப் பெற்றுக்கொண்டான். யோபுவைச் சோதிக்க தேவனிடத்தில் அனுமதி பெற்றுக்கொண்டான் (யோபு 2:4-6). மேலும், இயேசு கிறிஸ்து பேருதுவினிடத்தில் சீமோனே, சீமோனே இதோ கோதுமையைச் சுளகினால் புடைக்கிறது போலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக் கொண்டான் என்றார். (லூக். 22:31)

வசனம் நான்கில் சிரச்சேதம் பண்ணப்பட்ட கிறிஸ்தவர்கள் சரீரத்தோடு இல்லை. ஆத்துமாவில் சிங்காசனங்களில் உட்கார்ந்து கிறிஸ்துவுடன் ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள். இயேசு கிறிஸ்து தம்மைப் பின்பற்றின சபை விசுவாசிகளுக்கு கூறும்பொழுது நான் ஜெயங் கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே உட்கார்ந்ததுபோல ஜெயங் கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடு கூட உட்காரும்படிக்கு அருள் செய்வேன் என்றார் (வெளி. 3:21) அதன்படி சாத்தான் ஆயிரம் வருஷமளவும் கட்டப்பட்ட அதே நேரத்தில் மிருகத்தையாவது அதின் சொரூபத்தையாவது வணங்காமலும் தங்கள் நெற்றியிலும் தங்கள் கையிலும் அதின் முத்திரையைத் தரித்துக் கொள்ளாமலும் இருந்த கிறிஸ்தவர்கள் ரோம அரசாங்கத்தால் சிரச்சேதம் பண்ணப்பட்டார்கள். ஆனால், சாத்தான் அவர்களுடைய ஆத்துமாவை ஒன்றும் செய்யமுடியவில்லை. ஏனென்றால், அவன் கட்டப்பட்டான். அந்த ஆயிரம் வருஷம் அவர்கள் கிறிஸ்துவுடன் உட்கார்ந்து ஆளுகை செய்தனர்.


இன்று நாம் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து முதலாம் உயிர்த்தெழுதலான ஞானஸ்நானத்தில் பங்கு பெற்றால் பாக்கியவானா யிருப்போம். நாமும் கிறிஸ்துவுடனே கூட இன்னும் ஆளுகை செய்கிறவர் களாக இருக்கிறோம். இந்த ஆளுகை ஆயிரம் வருஷமாயிருக்கிறது. அதாவது, நீண்ட காலமாயிருக்கிறது. அது முழுமையான அரசாட்சியாக இருக்கிறது. சாத்தானின் செயல்கள் இன்று இல்லை. ஆகவே, அது நம்மைப் பாதிக்காது. ஏனென்றால், அவன் பாதாளத்திலே முத்திரை போடப்பட்டான். கிறிஸ்து வின் இரண்டாம் வருகையின் போது அவன் நரகத்திலே தள்ளப் படுவான் (வெளி. 20:10) அவர் வரும் வரை அவருடைய ஆளுகையில் பங்கு பெறுவோம். அவர் வந்து தமது ஆளுகையை பிதாவிடம் ஒப்புக் கொடுப்பார் (1 கொரி. 15:25). அதற்குள் அவருடைய முழுமையான அரசாட்சியான ஆயிர வருட அரசாட்சியில் பங்கு பெற ஜெபிக்கிறேன்.

**(தொடரும்)**

## கருத்தரங்கில் கலந்து கொண்டோருக்கு நன்றி



## கருத்தரங்கில் கலந்து கொண்டு சிறப்பித்தவர்கள்



Regd. News Paper RNI No. 47661/87
Postal regn. No. Erode/26/2012-2014
Posted at Erode HPO on 20/21 of Every Month.

Licensed to Post without pre payment
No: TN / WR / ERD / 03 / WPP / 2012-2014


## கருத்தரங்கில் கருத்துரையாற்றியவர்கள்




Bro. James Rajkumar



Bro. Prabhudoss Mally



Bro. Yesaian




Bro. Bhasker




Bro. Pandian



Bro. Benny Martin



Bro. Abraham Lingan



Bro. Williams




Bro. Solomon Bro. Saminathan



Bro. Philip

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.